# சைவநீதி
# SAIVANEETHI

சைவ வளர்ச்சி கருதிய செய்தி தரும் மாத இதழ்

**MONTHLY MAGAZINE OF SAIVAISM JUNE-JULY 2000**




## பொலநறுவை சிவாலய ஆனி உத்தர விழாச் சிறப்பிதழ்

## பொலநறுவையில் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்கள்







உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் 4 விக்கிரம ஆனி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 3

## அம்ம நாம் அஞ்சுமாறே

எதற்கும் அஞ்சாத நெஞ்சம் வேண்டும். இறைவன் எமக்குத் துணையாக இருக்கும் போது அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதும் இல்லை என்பது அப்பர் பெருமானின் உறுதியான வாக்கு. இவ்வுலகத்தில் எதற்கும் அஞ்சாவிட்டாலும் இறுதியில் ஒருவன் உடலையும் உயிரையும் கூறுபடுத்துவானே. கூற்றுவன் அவனைக்கண்டு அச்சம் கொள்ள வேண்டுமே? அதற்கும் அஞ்சேன் என்ற உறுதியை "நமனை அஞ்சோம்" என்பர் அப்பரடிகள்.

நம்மில் சிலரைக் கண்டு அச்சம் கொள்ளுகின்றார் மணிவாசகர். யார் அவர்கள்? முழுமுதற் கடவுளான சிவபெருமானை அன்றி வேறு தெய்வம் உண்டு என்பவரைக்கண்டு அஞ்சுகிறார் பயம் கொள்கிறார்.

"இத்தேவர் தேவர் அவர் தேவர் என்றிங்ஙன்
பொய்த் தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே"

அந்த வானவர் முழுமுதற் கடவுள். அவர்க்கும் பெரிய வானவராய் இருப்பவர் இவர் என்று இவ்வாறு உண்மையாகக் கடவுள் இல்லாத தெய்வங்களைக் கடவுள் என்று கூறி வீணாகப் பிதற்றும் இந்நிலவுலகு என்பது மணிவாசகர் வாக்கு.

புற்றிலே வாழும் பாம்பிற்கும் பொய்யர் பிறரை ஏமாற்றும் பொருட்டு மெய்மையைப் போல பேசும் பொய்யிற்கும் அஞ்ச மாட்டேன். நீண்டசடை முடியும் நெற்றிக் கண்ணுமுடைய எம்பிரானை அன்றி வேறு கடவுள் உள்ளார் என்பவரைக் கண்டு அச்சம் கொள்வர் மணிவாசகர்.

சிவனை கடவுளாகப் பெற்றவர்கள் சைவர்கள். சைவர்களுக்கு அடையாளம் திருநீறு. தீருநீறு அணியாதவர் முகம் சுடுகாட்டிற்குச்சமன் என்பர் பெரியோர். "நீறில்லா நெற்றி பாழ்" என்பர் ஔவையார். திருநீறு பூசுவதால் நோய் விலகும், பாவம் நீங்கும். திருநீறு அணியாதவரை மணிவாசகர் கண்டு அஞ்சுகின்றார்.

நோய்கள் வந்தாலும் அஞ்சேன், பிறப்பு, இறப்பு வந்தாலும் அஞ்சேன் இளம் பிறையைச்சடையிலே தரித்த எம்பிரான் அடியவரோடு கூடி அவன் சேவடி வாழ்த்தித் திரு நீறு அணியமாட்டாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே

*பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்*
*துணிநிலா அணியினான் தன் தொழும்பரோட ழுந்தி அம்மால்*
*திணிநிலம் பிளந்துங் காணச் சேவடி பரவி வெண்ணீறு*
*அணிகிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே*

உ
சிவமயம்

# சைவநீதி

## உள்ளே..........

1. அம்ம நாம் அஞ்சுமாறே
- ஆசிரியர் .......... 1

2. பொருளடக்கம்
.......... 2

3. பொலநறுவை சிவ தேவாலயம்
- பேராசிரியர் பொன். சக்திவேல் .......... 3

4. விருந்து
- திருமுருக கிருபானந்த வாரியார் .......... 4

5. இந்திரன் .......... 8

6. பேச்சிலே சிறந்தது
- கி. வா. ஜகந்நாதன் .......... 9

7. முருகப் பெருமான் தகரை ஊர்தியாகக் கொண்ட வரலாறு .......... 11

8. அமர் நீதி நாயனார்
- சிவசண்முகவடிவேல் .......... 12

9. திருவாரூர்ப் பழமொழிப் பதிகம்
- முருகவே பரமநாதன் .......... 14

10. இறையுணர்விற்குப் பட்டர்பிரான் காட்டும் மூவகை உபாயங்கள்
- சைவப்புலவர் அனு. வை. நாகராஜன் .......... 16

11. வள்ளுவத்தில் சைவ சித்தாந்தம் அகரமாகிய முதல்வன்
- சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம் .......... 18

12. மகோற்சவ காலத்தில் ஒத வேண்டிய பண்ணும் பாடல்களும்
- நமர் .......... 21

13. திருமுறைப் பாடல்கள் ஒதப்படும் இராகங்கள் .......... 25

14. சைவ நெறிப் பாடமும் பயிற்சியும்
- சாந்தையூரான் .......... 26

15. The Shaiva Life
- S. Shivapadasundaram, B. A. .......... 28

16. நினைவிற் கொள்வதற்கு .......... 30

சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.
- இதழ் நிர்வாகிகள்.

# பொலநறுவை சிவ தேவாலயம்

*பேராசிரியர் பொன். சக்திவேல்*

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கையில் சைவ சமயம் செல்வாக்குப் பெற்று வளர்ச்சி அடைந்துள்ளதை வரலாற்று ஆசிரியர்களின் குறிப்புகளிலிருந்தும் சமகால இந்திய இலங்கை இலக்கியங்களிலிருந்தும், கி. மு. 3ஆம் நூற்றாண்டள வில கிடைக்கின்ற பிராமி குகைச்சாசனங்களில் ஓரளவுக்கு அறிந்து கொள்ளலாம். வரலாற்றுச் சாசனங்களில் அநுராதபுரி காலம், பொலநறுவக்காலம், பாண்டிய விஜயநகரக் காலம், யாழ்ப்பாண இராச்சிய காலம் போன்ற காலப் பகுதிகளில் இடம் பெற்ற கருத்துக்களில் பொலநறுவைச் சிவன் தேவாலயம் வரலாற்று சிறப்பு மிக்க தொன்றாகும்.

இலங்கையை கைப்பற்றிய சோழமன்னர்கள் கி.பி. 11ஆம் நூற்றாண்டு இலங்கையை மும்முடிச் சோழ மண்டலம் என்று அழைத்தனர். சோழ மன்னர்கள் அநுராதபுரியை கைவிட்டு பொலநறுவையைத் தலை நகரமாக்கியதுடன் அதற்கு "ஜனனாதமங்கலம்" எனப் பெயரிட்டனர். இப் பொலநறுவைப் பிரதேசத்தில் சோழ மன்னர்கள் திராவிடக்கலைப்பாணியைப் பின்பற்றி பல சிவதேவாலயங்களைக் கட்டுவித்தனர். இச் சிவன் தேவாலயம் கட்ட இரண்டாயிரம் பேர்கள் நாளாந்தம் வேலைசெய்து 20 வருடங்களில் கட்டி முடிக்கப்பட்டது. சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்களிற் பல அழிபாடுகளில் உள்ளன. கி. பி. 11ம் நூற்றாண்டுக்கும் கி. பி. 13ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியை சேர்ந்த முப்பதுக்கும் குறையாத சைவ வைஷ்ணவக் கோயில்கள் பொலநறுவைப் பகுதிகளில் வெளிப்படுத்தப்பட்டன. இவற்றுள் ஐந்து விஷ்ணு கோயில்களும், ஒரு காளி கோயிலும் காணப்படுகின்றன. இவற்றுள் பல சோழர் காலத்தவை. இவற்றுள் 2ம் சிவதேவாலயம் எனப்படும் "வாணவன் மாதேவி ஈஸ்வரன்" மிகவும் சிறப்புடையது. இது 1ம் இராசேந்திரச் சோழனால் அமைக்கப்பட்டதாகும். இக் கோயிலுக்கு இராசேந்திர சோழனால் அவனது தாயின் பெயர் இடப் பட்டது. இக்கோயிலில் கல்லினாலும் உலோகத் தினாலும் செய்யப்பட்ட பல விக்கிரகங்கள் பலவும் கிடைத்துள்ளன. சோழ மன்னர்கள் இந்துக்கள் ஆகையால் மன்னர்களின் மதமாக இந்து மதம் நன்கு வளர்ச்சியடைந்தது.

பொலநறுவைச் சிவதேவாலயங்களில் 1ம் சிவ தேவாலயம் பாண்டியர் சிற்ப முறையில் கட்டப் பட்டதாகக் கூறப்படுகிறது. இது 12ம் அல்லது 13ம் நூற்றாண்டிற் கட்டப்பட்டிருக்கலாம். பொலநறுவை வீழ்ச்சிக்குப் பின் தமிழ்ப் பிரதேசங்களாகிய யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு போன்ற இடங்களில் இந்து மன்னர்களும், சிற்றரசர்களும் ஆட்சி நடத்தியமையினால் இந்துமதத்தின் செல்வாக்கு மேலோங்கியது. மட்டக்களப்பில் திருக்கோயில் பாண்டியர் பாணியில் கட்டப்பட்டது. கோணேசர் கோவிலும் பாண்டியர் பாணியிற் திருத்திக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். கோட்டை மன்னன் 6ம் பராக்கிரமபாகு காலத்தில் முனீஸ்வரத்தில் தேவுந்தர எனும் இடத்திலும் பிராமணர்களுக்குத் தானங்கள் வழங்கப்பட்டன. யாழ்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கட்டப்பட்டது. 6ம் பாக்கிரமபாகுவின் காலத்தில் சண்பகப்பெருமாள் என அழைக்கப்படும் புவனேகபாக யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்து வந்து யாழ்ப்பாணத்தையும் வன்னியை யும் தோற்கடித்து நல்லூரைத் தலைநகராக்கி அங்கு கந்தசுவாமி கோவிலைக் கட்டினான். சிங்களப் பிர தேசங்களிலும் ஓரளவுக்கு நல்லநிலையிலிருந்த இந்துமதச் செல்வாக்கு 16ம் நூற்றாண்டில் உச்ச நிலையை அடைந்தது. 1ம் இராஜசிங்கன் சைவத்தைப் பின்பற்றினான். அரண்மனையில் இந்தமதச் செல்வாக்கு மேலோங்கியது. பத்தினி கோவிலுக்கு இவன் கொடுத்த நிலத்தானம் குறிப்பிடத்தக்கது. இவனது காலத்தில் விஜய நகரக் கட்டிடப்பாணியில் கோவில்கள் கட்டப்பட்டன. இராஜசிங்கன் சிவனொளிபாத மலையின் வருமானங் களைக் கூட சைவத் துறவியர்களுக்கு வழங்கினான் என்று துளவம்சம் கூறுகிறது.

# விருந்து

- திருமுருக கிருபானந்த வாரியார் -

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

– திருக்குறள் – 81

இல்லறத்தானின் முதற்கடமை விருந்தினரை உபசரித்தலேயாகும்.

இந்தக் கருத்தை வலியுறுத்தும் இனிய வரலாறு அடியில் வருமாறு.

விருந்து என்றால் புதுமை என்று பொருள். புதியவராகத் தம் வீடு தேடி வந்தவர்களுக்கு விருந்து என்று பேர். அவ்விருந்தினர் இரு வகையினராம். முன்னறி முகமற்று வந்தோரும் அஃதின்றி வந்தோருமாவர். மனையாளோடு கூடி இல்லத்தின்கண் இருந்து மனைவி மக்கள் முதலியோரைக் காப்பாற்றி வாழ்வது எதன் பொருட்டு எனில் தனது வீடுதேடி வருகின்ற விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உபகாரம் செய்வதற்கேயாம்.

விருந்தினர்கள் வந்து தங்குவதற்கென்றே நம் முன்னோர்கள் விடு கட்டுகின்றபோது திண்ணையென்று ஒரு பாகத்தை ஒதுக்கி வைத்தார்கள். மழைக்கு ஒதுங்கவும் ஏழைகள் படுக்கவும் விருந்தினர் இருந்து இளைப்பாறவும் திண்ணை உபயோகமாகும். விருந்தினர் என்றால் யாவர்? உலகில் அநேகர் தங்கள் வீட்டில் மாமனோ மைத்துனனோ வேறு பந்துக்களில் ஒருவரோ வந்தால் விருந்து வந்தது என்று கூறுகின்றனர். உறவினரும் சிநேகிதரும் விருந்தினரல்லர். புதியவராக வந்தவரே விருந்தினராம். அங்ஙனம் வந்த விருந்தினரைப் புறத்தில் வைத்துவிட்டு இறவாத தன்மையை நல்கும் தேவாமிர்தமேயாயினும் உண்ணப்படாது.

நாள்தோறும் தன்னை நோக்கி வந்த விருந்தினரை உணவு கொடுத்து உபசரித்துப் பாதுகாப்பவனுடைய இல்வாழ்க்கையானது வறுமையினால் துன்புற்று வருந்தாது. பொருள் கிடைத்தவுடன் அப்பொருளை வறிதே புதைத்து வைக்காது விருந்தினரைக் கண்டவுடனே இனிய முகத்துடன் நல்வரவு கூறி அவர்கள் பசியைத் தீர்த்து உதவி செய்வானது மனையின்கண் திருமகள் (இலட்சுமி) தான் தந்த பொருளை நல்வழியில் செலவு செய்கிறானென்று மேலும் நிறைந்த செல்வத்தைத் தந்து மனம் பொருந்தி வீற்றிருப்பாள்.

விருந்தோம்புவான் வீட்டில் திருமகள் என்றும் இருந்து துணைசெய்தல்போல், நிலமகளும் துணை செய்வாள். ஒரு விருந்து வந்தால் "திண்ணையிலிரு; நாங்கள் உண்டு மிகுந்தால் போடுகிறோம்" என்று சிலர் சொல்லுகிறார்கள்; அது தவறு. விருந்தினரைப் பசியோடு இருக்க வைத்து ஒருபோதும் உண்ணப்படாது. முன்னே விருந்தினரை உண்பித்துப் பின்னர் மிகுந்திருக்கும் உணவை உண்ணுவோனுடைய விளைநிலம் வித்திடாமலே விளையும். ஒரு சிலருடைய வயலில் பயிர் சாவியாகிவிடுகிறது. ஒரு சிலருடைய வயல் நன்றாக விளைகிறது. இதற்கு என்ன காரணம்? முற்பிறப்பிலும் இப்பிறப்பிலும் விருந்தோம்புவான் விளைநிலம் நல்ல பயனைத் தருகிறது. விருந்தினரைக் கடிந்து பேசித் துரத்தினோனது வயலில் விருந்தினர் முகம் வாடியதுபோல் பயிரும் வாடிப் பயனைத் தருவதில்லை. ''பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்'' என்ற முதுமொழியையும் உற்று நோக்குக.

இல்வாழ்வான் அவசியம் செய்யத்தக்க ஐம்பெரும் வேள்விகள் என்பவை:

1. பிரம வேள்வி: வேதமோதல்
2. பிதிர் வேள்வி: பதிர்க்கடனாற்றல்
3. தேவ வேள்வி: தேவதைகளைக் குறித்துத் தீ வேட்டல்
4. பூத வேள்ளி காக்கைக் கிடுதல் முதலியன
5. மானுட வேள்வி: விருந்தோம்பல்

*பசுவை வீணாகக் கொல்பவன் அப்பசுவுக்கு எத்தனை ரோமங்கள் இருக்கின்றனவோ அத்தனை ஜென்மங்கள் பசுவாகப் பிறந்து பிறரால் கொல்லப்படுவான். பசுவைக் காப்பாற்றிப் பேணுவதனால் கிடைக்கும் புண்ணியத்தின் தன்மைக்கு அளவேயில்லை.*

ஒண்பிரம மேவேத மோதுதல்ஓ மம்வளர்த்தல்
எண்தெய்வம் ஈதல்பலி யேபூதம் – ஒண்டொடியீர்
எண்ணீர்க் கடனாற்ற லேபிதிர்வி ருந்தோம்பல்
அண்ணீர்மை மானுடயா கம்.

இப்பஞ்ச மகா யாகங்களில் விருந்தோம்பல் என்னும் மானுட யாகமே மிகவும் முக்கியமாம். இல்வாழ்வோர் ஒவ்வொருவரும் அதனை அவசியம் செய்ய வேண்டும். தன்னிடத்தில் வந்த விருந்தினரைப் பேணி இன்னும் விருந்து வருமோ என்று எதிர்பார்க்கும் உத்தமன் வானுலகம் செல்லுங்கால் தேவர்கள் நமக்கு நல்ல விருந்தென்று எதிர்கொள்வர். எனவே, விருந்தை இகழாது உபசரிப்பான், இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தையடைவான். வடவைத் தழல் போன்று அக்கினியாறு எதிர்ப்பட்டபோதது சந்திரவதி, 'என் வீடு தேடி வந்த விருந்தினரை இகழ்ந்திருந்தது உண்டேல், என்னைச் சுடுவாயாக' என்று அவ்வக்கினியாற்றில் பாய்ந்தனள். அக்கினி பன்னீர்போற் குளிர்ந்திருந்தது. விருந்தோம்பலின்பெருமைதான் என்னே! என்னே! செல்வமுடையோர்கள்தாம் விருந்தினரை உபசரித்து உணவளிக்க வேண்டும் என்பதில்லை; வறிஞர்களும் விருந்தோம்ப வேண்டும். "வறிஞர்க்கழகு வறுமையிற் செம்மை" என்ற நறுந்தொகைப்படி எத்தனைச் சிரமமிருந்தாலும் – நித்திய தரித்திரர்களாக இருப்பினும் தமது சக்திக்குத் தக்கவாறு விருந்தினரை உபசரிக்க வேண்டும். குசேலரைக் காட்டிலும் தரித்திரர் இல்லை. இருபத்தேழு மக்களுடன் குசேலருடைய மனைவியார் தரித்திரத்தாலே எவ்வளவு துன்புற்றனர்? அவ்வம்மையார் தன் வீடு தேடி வந்த விருந்தினருக்கு இல்லையென்று கூறவில்லை என்றால் என்னே! அவ்வம்மையாரின் கருணை. அந்த மாதரசியைப் பற்றி அந்நூலாசிரியர் புகழ்ந்துரைக்குமாறு காண்க.

"மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டு
நேசமிக் குடையாள் கொண்க னினைப்பறிந் தொழுகு நீராள்"

பண்டைக்காலத்தில் பறவைகள்கூட விருந்தோம்பியுள்ளன. ஈண்டு அவ்வரலாறுகளில் ஒன்றைக் கூறுவோம்?

ஒரு பெரிய வனத்தில் கொடிய வேடன் ஒருவன் இருந்தனன். இனிய ஓசைகளைச் செய்து பறந்து வானத்தை வனப்புறப் புரியும் பறவைகளையும் விலங்குகளையும் கொல்வதே அவனுடைய தொழில். கறுத்த உடம்பும் சிவந்த கண்களுமுடையயோனாய் வில்லையும் அம்பையுமேந்திய கரத்துடன் கூற்றுவனைப்போல் அவன் வனத்தில் உலாவிப் பல உயிர்களுக்குத் தீங்கு புரிந்து கொண்டிருந்தனன். அவன் ஒரு நாள் நாற்புறத்தும் பெருமலைகள் சூழ்ந்துள்ள மலைச் சரிவில் வேட்டையாடிக் கொண்டிருந்த சமயத்தில் திடீரென மேகங்கூடிப் பேரிடியுடன் பெருமழை பொழிந்தது. எங்கணும் நீர் மயமாயிற்று; வழிகளெல்லாம் காட்டருவிகளாயின. மேட்டுப் பேரிடியுடன் பெருமழை பொழிந்தது. எங்கணும் நீர் மயமாயிற்று; வழிகளெல்லாம் காட்டருவிகளாயினஇ மேட்டுப் பாங்கரில் சிங்கம் முதலிய பெருமிருகங்கள் இருந்து ஒலித்தன. இந்த ஆபத்தான இடத்தில் மழையாலடிக்கப்பட்ட வேடனுடைய உடலும் உடையும் நனைந்து ஈரமாயின. எனினும், அவன் மனத்தில் மட்டும் சிறிதும் ஈரம் ஏற்படவில்லை. அத்தருணத்தில் ஒரு பெண் புறா காட்டாற்றில் அகப்பட்டு ஒருவாறு கரையில் ஒதுக்கப்பட்டுக் குளிரால் வாடி, இறகுகள் நனைந்து, பறக்கும் தன்மையற்றுக் கிடந்தது. அதைக்கண்ட வேடன், உடனே அதை எடுத்துச் சற்றும் கருணையின்றித் தனது கூட்டிற்குள் அடைத்துக் கொண்டனன்.

பின்னர், மழை விட்டவுடன் மெல்ல நடந்து அவ்வனத்தின் மையத்திலுள்ள பெரிய மரத்தினிடம் சென்றனன். அத்தரு பல கிளைகளுடன் வானுறவோங்கி வளர்ந்து பல பறவைகளுக்கு உறைவிடமாகி நிழலையும் ஆதரவையும் தருவதாயிருந்தது. குளிரால் வாடிய வேடன், அத்தருவினடியில் சென்று சற்று இளைப்பாறினன். மேகங்கள் விலகி விண்ணிடை உடுக்குலங்கள் (நட்சத்திரங்கள்) ஒளி செய்தன வேடனுடைய வீடு நெடுந்தூரத்திலிருந்தபடியால் அவன் வீட்டிற்குச் செல்ல முடியாதவனாகி, அவ்விரவை

> சூரியனை உதிக்கும் பொழுதும், அஸ்தமிக்கும் பொழுதும், கிரஹணம் பிடித்திருக்கும் பொழுதும் பார்க்கக் கூடாது. பார்த்தால் கண்ணுக்கு கெடுதி ஆகும். அதே போல் சூரிய சந்திர கிரஹண சமயத்திலும் சூரிய சந்திரர்களைப் பார்க்கக் கூடாது.

அத்தருவினடியிலேயே கழிக்க எண்ணினன். அச்சமயம் அத்தருவின் மேலிருந்த ஆண் புறாவானது கண்ணீர் சொரிந்து புலம்பலுற்றது. "அந்தோ! என்னருமை மனையாளே! நீ இன்னும் திரும்பி வரவில்லையே! உனக்கு யாது விபத்து நேர்ந்ததோ? மழையில் அகப்பட்டுக் கொண்டு எங்கித் தவிக்கின்றனையோ? ஒளியுடைய மலர்ந்த கண்களும், தேன் போன்ற இனிய குரலும், மிருதுவான சிறகும் உடைய உன்னைத் துறந்து இவ்வுலகில் எனக்கு என்ன வாழ்விருக்கிறது. இதுகாறும் நீ கூட்டிற்கு வராமல் எங்குற்றனை? யான் உண்டபின் நீ உண்பாய்; யான் மகிழ்ந்தால் நீ மகிழ்வாய்; யான் வருந்தினால் நீ வருந்துவாய்; எனது சுகதுக்கங்களை உன்னுடையதாக எண்ணுகின்ற உன்னையொழித்து யான் உயிர் தரியேன்; நீ இல்லையேல் இது வீடன்று; நான் ஒரு சமயத்தில் கோபித்தாலும் நீ இனிய ஒழுக்கத்தால் சாந்தப்படுத்தி உபசரிப்பையே! இல்வாழ்வானுக்குச் சிறந்த மித்துரு பத்தினியல்லவா? நீ எங்குற்றனை?" என்று பலவாறகப் புலம்பிற்று. இவற்றை வேடனும் அவ்வேடன் கூட்டிற்குள் அடைபட்டிருந்த புறாவின் மனைவியாகிய பெண் புறாவும் கேட்டார்கள். பெண் புறா, தன் நாயகன் தன்மீது வைத்துள்ள அன்பை நினைத்து மகிழ்ந்து ஆண் புறாவை நோக்கி, "ஆர்வல! நான் வினைவயப்பட்டு இவ்வேடனுடைய கூட்டில் அடைபட்டிருக்கிறேன்; நாம் வாழுகிற இடத்திற்கு இவ்வேடன் அதிதியாக வந்திருக்கிறான்; வந்த விருந்தினரைப் பேணுவது இல்லறத்தாரின் கடமை. வேடன் குளிரால் வருந்திப் பசியால் வாடியிருக்கிறான்; வீடு தேடி வந்த விருந்தினரை நாயகனும் நாயகியும் சேர்ந்து உபசரிக்க வேண்டும்; தங்கள் பத்தினியாகிய என்னை இவ்வேடன் கூட்டில் வைத்திருக்கிறான். தாங்கள் வேடனுடைய குளிரை நீக்கி உணவைக் கொடுத்து உபசரியும்; ஓர் அதிதி எந்த இல்லறத்தானிடத்தில் வந்து பட்டினியாக இரவைக் கழிக்கிறானோ அந்த இல்லறத்தான் மீளா நரகத்திற்கு ஆளாகின்றான். பட்டினியாய்க் கழிக்கும் அந்த அதிதியுடைய பாவத்தில் பாதியையும் பெற்றுக் கொள்கிறான்; விருந்தினரது பசியை நீக்கிப் பாதுகாத்தவன் புத்தேளிர் வாழுமுலகிற் புகுவான். எனவே, தாங்கள் அதிதி பூஜையைப் புரிந்து இகபர நலனை எய்தும்" என்று கூறியது.

இந்தத் தரும வசனங்களைக் கேட்ட ஆண் புறா, தன் பத்தினி கூட்டில் அடைபட்டிருப்பதைக் கண்டு வருந்தி, தனக்கு இடர்செய்த வேடனை அதிதியாக உதவி செய்யக் கடப்பாடுடையோம் என்று அவனுக்கு உணவு தருமாறு வேண்டும் தன் பத்தினியின் உயர்குணங்களை எண்ணிப் பெரு மகிழ்வுற்று, அதிதிகளை ஆராதிப்பதே சிறந்தது என்று மரத்தை விட்டிறங்கி வேடனை நோக்கி, "ஐயா! உமக்கு நலவரவு, எமது வீட்டிற்கு வந்த நீர் பட்டினியிருப்பது நலமன்று; சற்றுத் தாமதியும்" என்று முகமன் கூறி, உலர்ந்த சருகுகளையும் சிறு குச்சிகளையும் ஒன்றாகக் குவித்து அருகிலிருந்த சிற்றூருக்குச் சென்று ஒரு கொள்ளித் துரும்பை அலகினால் கவ்விக் கொண்டுவந்து குவித்து வைத்த சருகுகளின் மத்தியில் வைத்துச் சிறகால் காற்று வர விசிறி நெருப்புண்டாக்கி, "ஐயா! இந்த நெருப்பினருகிலிருந்து குளிரை நீக்கிக் கொள்ளும்" என்றது. வேடன் அதன் அன்பையும் ஆதரவையும் எண்ணி உள்ளம் மகிழ்ந்து தீக்காய்ந்து குளிரை நீக்கிக் கொண்டான். அவன் தீக்காய்ந்து கொண்டிருக்குங்காலை புறா சிறு சிறு குச்சிகளைக் கொண்டுவந்து நெருப்பில் போட்டுக் கொண்டேயிருந்தது. பின்னர், ஆண் புறா வேடனைப் பார்த்து, "ஐயா! பகற் காலமாக இருந்தால் பழங்களைக் கொண்டுவந்து உமக்கு உணவாகத் தருவேன். இந்த இராப்பொழுதில் வேறு உணவைத் தேடிக் கொடுக்க முடியாது; விருந்தினரைப் பேணி உணவு கொடுத்து ஆதரிப்பதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை' என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதோ, எரிகின்ற நெருப்பில் வீழ்ந்து மடிகிறேன்; என்னுடைய மாமிசத்தைப் புசித்துப் பசிப்பிணியை நீக்குதி" என்று இனிமையாகக் கூறி அக்கினியை வலம் வந்து அதில் வீழ்ந்து மடிந்தது.

அது கண்ட வேடனுக்கு நல்லுணர்வு தோன்றியது. அந்தப் புறாவின் அன்பையும் அறத்தையும் விருந்தை உபசரிக்கும் பெருந்தகைமையையும் எண்ணி எண்ணி இறும்பூதுற்றான். அந்தப் புறாவின் செயற்கருஞ்செயல் வேடனுடைய கடின சித்தத்தைக்

> உலகமெல்லாம் தெய்வத்தினுள் அடக்கம், தெய்வம் மந்திரத்தினுள் அடக்கம். மந்திரம் வேதத்துள் அடக்கம். வேத சாஸ்திரம் தர்மத்தினுள் அடக்கம். அதனால் தர்மம் தான் தெய்வத்தைக் காண்பதற்கு வழி வகுக்கின்றது.

கரைத்து உருக்கியது. அவனது மனதில் நெடுநாளாகத் தழைத்திருந்த கோபம், கொலை, குரூரம், கொடுமை முதலிய மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்தது. அன்பு ஊற்றெடுக்க ஆரம்பித்தது. "அந்தோ! நான் இத்தனை நாளாகக் கொடிய பாவமாகிய கொலைத் தொழிலைப் புரிந்து மீளா நரகத்திற்கு வழி தேடிக் கொண்டேனே. எத்தனை உயிர்களைப் பதைக்கப் பதைக்கக் கொன்றேன்? கருணை சிறிதுமில்லாப் பாவியானனே; ஆ! ஆ! இந்தப் பறவையின் உத்தம குணத்தை யாரே மறக்க முடியும்? மனிதனாகப் பிறந்த என்னிடத்தில் இந்தப் பரோபகாரம் இல்லையே? நான் மனிதனல்லன்; விலங்கானேன். இப்புறா பறவையன்று; உயர்ந்த மனிதன், ஏ பறவையே! நீயே எனக்குச் சற்குரு. ஒரு கணத்தில் என்னுடைய கடின சித்தத்தைக் கரைத்து நல்லுணர்வை நல்கினாய். இனி நான் ஓர் உயிருக்குந் தீங்கு புரியேன். கொலைத் தொழிலை இக்கணமே ஒழித்தேன். மறந்தும் பிறன்கேடு சூழேன். இதுகாறும் புரிந்த எண்ணிறந்த மறச் செயல்களுக்கும் பரிகாரம் தேடுவேன்" என்று கண்கலுழ்ந்து கதறியவண்ணமாய் வாய் விட்டுப் புலம்பிக், கரத்திலிருந்த வில்லையும் கூரிய கணைகளையும் இரும்புக் கூடுகளையும் வலைகளையும் வீசி எறிந்தனன். கூட்டிலிருந்த பெண் புறாவையும் விட்டுவிட்டனன். தான் செய்த தீச்செயலை எண்ணி எண்ணி, மனம் வருந்தி நின்றனன். கூட்டிலிருந்து வெளிப்பட்ட பெண் புறா கணவனிறந்த சிதாக்கினியை வலம் வந்து கதறியழுது "ஆ! என் உயிர்க் காதல! உன்னைப் பிரிந்து இவ்வுலகில் யான் வாழேன்; பெண்களுக்குக் கணவனே கடவுள்; கணவனே கதி; கணவனே வாழ்வு; கணவனைப் பிரிந்து உயிர் வாழ மாட்டார்கள்; நீ சென்ற வானுலகத்திற்கு யானும் வருகிறேன்" என்று புலம்பி வேடனை நோக்கி, "ஐயா! நீயோ மிகவும் பசித்திருக்கின்றனை; என் நாயகனது இறைச்சியால் உன் வயிறு நிரம்பாது. யானும் இத்தீயில் வீழ்கிறேன்; என்னையும் உண்டு இளைப்பாறுவாய்! அதிதிகளைப் பூசிப்பதே எனது கடமை" என்று மொழிந்து நெருப்பில் வீழ்ந்திறந்தது.

உடனே, அவ்விரு பறவைகளும் விருந்தோம்பலின் பயனாகச் சூட்சும உருவத்துடன் வானோர் எதிர்கொள்ள சுவர்க்க லோகத்திற்குச் சென்றன. அக்காட்சியைக் கண்ட வேடன் வியப்புற்று விருந்தோம்பலின் பெருமையையுணர்ந்து, சதிபதிகளின் ஒற்றுமையையும் பரோபகாரத்தின் தகைமையையும் எண்ணி நல்வழிப்பட்டு, முற்றிய எண்ணமுடையவனாய் ஈசுவரனை நோக்கித் தவம் புரிவானாயினன்.

பேடையைப்பிடித்துத் தன்னைப்பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த காதை வேதத்தின் விழுமி தன்றோ!

- கம்பராமாயணம்

விருந்தோம்புதற் பொருட்டுப் பறவைகளாயிருந்தும் அப்புறாக்கள் எவ்வளவு அன்புடன் தமது உடல்களையே உணவாகக் கொடுத்தன. விருந்தோம்புவதைக் காட்டிலுஞ் சிறந்த தவமில்லை. செல்வம் வந்தவுடனே அதன் நிலையாமையையுணர்ந்து, இருக்கும்போதே பகிர்ந்தளித்துப் பல்லாரோடு உண்டு, இம்மை நலனையும் மறுமை நலனையும் பெறவேண்டும். தானும் உண்ணாது பிறர்க்கும் கொடாது பொருளை வைத்துக் காப்பாற்றியவன், முடிவில் வீணே இறந்து இகபர நலன்களை இழந்து விடுகின்றனன். உயிர் பிரிகின்ற தருவாயில் நம்முடன் மறு பிறப்பிலும் வந்து துணை செய்வது எது? நாம் புரிந்து அறமே அல்லவா? "துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப் பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க" என்ற நாலடியாரின் வாக்கையும் உணர்க. அங்ஙனம் விருந்தோம்புங்கால் இனிய மொழிகளும் குளிர்ந்த முகமும் உடையவராயிருத்தல் வேண்டும். மோந்தால் வாடுந் தன்மையுடையது அனிச்சமலர்; சிறிது முகம் சுளித்துப் பார்த்தால் விருந்தினர் முகம் வாடும். அவ்வளவு மென்மையுடையது விருந்து.

ஆதலால், இல்வாழ்வோர் மலர்ந்த முகத்தோடும், இனிய மொழிகளுடனும் விருந்தோம்பி இகபர சௌபாக்கியங்களை எய்துவராக!


நீர் நுழைய முடியாத இடத்தில் நெய் நுழையும். நெய் நுழையாத இடத்தில் புகை நுழையும். புகை நுழையாத இடத்தில் தரித்திரம் நுழையும். அதை நுழைய விடாமல் சமாளிப்பவனே உயர்ந்த சம்சாரியாவான்.

It yields distinction, yields prosperity; what gain greater than virtue can a living man obtain? 31

திக்குப்பாலர்

# இந்திரன்

காசிபமுனிவருக்கு அதிதியிடம் உதித்தவன் இந்திரன். தேவர்களுக்கு அரசன். இவனின் இராஜதானி – அமராவதி, ஆயுதம் வச்சிரம். தேவி இந்திராணி. வாகனம் ஐராவதம் என்னும் யானை உச்சைச் சிரவம் என்னும் வெள்ளைக் குதிரை. சபை சுதர்மை. வனம் நந்தனம். சாரதி மாதலி, செல்வம் கற்பகதரு. சந்தனம் அரிசந்தனம். பாரிசாதம் மந்தாரம். குமாரன் சயந்தன். இரதம் வியோமயானம். பானம் அமிர்தம் .தேவவைத்தியர் அச்வினி தேவர், தன்வந்திரி, அரம்பையர் ஊர்வசி, திலோத்தமை முதலியோர். இவன் நூறுயாகம் செய்து இந்திரப் பதம் அடைந்தவன். கிழக்குத் திக்குப்பாலகன்.



இந்திரன்

ஐராவத கஜாரூடம்
ஸ்வர்ணவர்ணம் கிரீடிநம்।
ஸஹஸ்ர நயநம் ஸக்ரம்
வஜ்பாணிம் விபாவயேத்॥

முசுகுந்தன் உதவியால் வலனைக் கொன்று, வலாரி எனப்பட்டவன். தான் சிவமூர்த்தியிடம் பெற்றுப் பூசித்து வந்த சோமாஸ்கந்த மூர்த்தியை முசுகுந்தன் கேட்க, கொடுக்க மனமில்லாது வேறு ஆறு சோமாஸ்கந்த மூர்த்தங்களை மயனால் உருவாக்கித்தர முசுகுந்தன் மறுத்தது கண்டு விஷ்ணுவால் பூசிக்கப்பட்ட அந்த மூர்த்தத்தையே கொடுத்து சிவகோபத்தால் நீச்சனாகத் திருவாரூரிற் பிறந்தான்.

# அன்பற்ற விருந்தின் இயல்பு

ஒப்புடன் முகம லர்ந்தே
உபசரித்து உண்மை பேசி
உப்பில்லாக் கூழிட் டாலும்
உண்பதே அமிர்த மாகும்
முப்பழ மொடுபால் அன்னம்
முகம்கடுத்து இடுவ ராயின்
கப்பிய பசியி னோடு
கடும்பசி ஆகுந் தானே.

அனைவரும் ஒப்பக் கூடிய முகமலர்ச்சியுடன் உபசாரம் செய்து உண்மையான சொற்களைக் கூறி உப்பில்லாத கூழை வார்த்தாலும், அந்தக் கூழ் உண்பவர்க்கு அமிழ்தமே ஆகும். அங்ஙனமின்றி மா, பலா, வாழை முதலான பழங்களுடன் உயர்ந்த பால் உணவை அன்பில்லாது முகம் சுளித்து அளிப்பாராயின், அது உண்பவருக்கு முன்பே உள்ள பசியுடன் மேலும் மிகுந்த பசியை உண்டாக்கும்.

அறத்தின்ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.

# பேச்சிலே சிறந்தது

- கி. வா. ஜகந்நாதன் -

மழலை, பேச்சுக்கு முளையாதலால் இன்பத்தை உண்டாக்குகிறது. தீமை இல்லாததால் விரும்பிக் கேட்கிறோம். மழலை வளர்ந்த பேச்சும் குழந்தை பேசுவதுபோலத் தீமை இல்லாமல் இருக்க வேண்டும். பிறருடைய உள்ளத்துக்குத் தன் கருத்துப் புரியும்படி செய்து, அவர்களுக்கு இன்பம் உண்டாகும்படி பேசுகின்றதுதான் பேச்சு; நல்ல பேச்சு. பிறருடைய உள்ளம் புண்படும்படியாகப் பேசுகின்ற பேச்சுத் தாழ்ந்தது. நம்மைப் படைத்துக் காக்கின்ற இறைவனுடைய உள்ளம் குளிரும்படியாகப் பேசுகின்ற பேச்சு எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த பேச்சு.

இறைவன் உள்ளம் குளிரும்படி பேசுவதற்கு நமக்கு என்ன தெரியும் என்று கேட்கலாம். "நான் உனக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன்" என்று சொன்னால் அந்தப் பேச்சினாலே ஒருவனுடைய உள்ளம் குளிருகின்றது. அந்தப் பேச்சினாலே தனக்கு வரும் பெரிய ஊதியத்தை எண்ணியே அவன் மனம் குளிருகின்றது. ஆனால் இறைவனுக்கு நாம் எதைத் தருவதாகச் சொல்லலாம்? நம்மிடம் அவனுக்கு அளிக்கத்தக்க பொருள் என்ன இருக்கிறது? இறைவன் நம்மால் பெறுவது ஒன்றும் இல்லை. அவன் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்துக் கொண்டிருக்க, நாம் அவனுக்குக் கொடுப்பதாவது!

பலவகையான அணிகளைத் தங்கத்தினால் பண்ணி அணிந்து கொள்கிறோம். அந்தத் தங்கத்தினாலே நமக்குப் பலவிதமான பயன்கள் இருக்கின்றன. நம்மால் அந்தத் தங்கத்திற்கு என்ன பயன் இருக்கிறது? இறைவன் தங்கம் போன்றவன். அவனுடைய அருளினாலே நாம் தனுகரணபுவன போகங்களைப் பெற்றிருக்கிறோம். ஆனால் நம்மாலே ஆண்டவனுக்கு ஏதாவது உபகாரம் உண்டா? இல்லை.

இதைப் பட்டினத்தார் சொல்கிறார்.

"பொன்னாற்ப்ர யோசனம் பொன்படைத்
தாற்குண்டு அப் பொன்படைத்தான்
தன்னாற்ப்ர யோசனம் பொன்னுக்கங்
கெதுண்டத் தன்மையைப் போல்
உன்னாற்ப்ர யோசனம் வேணதெல்
லாமுண்டிங் குன்றனக்கே
என்னாற்ப்ர யோசனம் ஏதுண்டு
காளத்தி ஈச்சுரனே"

என்பது அவர் பாட்டு.

நமக்கு எல்லா இன்ப நலங்களையும் அளிக்கின்ற கடவுளுக்கு நம்மால் உபகாரம் ஒன்றும் இல்லை என்று அவர் சொல்கிறார். அபகாரந்தான் உண்டாகிறது. இறைவன் கொடுத்த நாக்கினால் வாய் கூசாது கடவுள் இல்லை என்று சொல்லித் தவறு செய்கிறோம். இறைவனைத் திட்டுகிறோம். அவன் குழந்தைகளாகிய மக்களை வைகிறோம். இப்படி அவனுக்கு நாம் அபகாரம் செய்கிறோமே தவிர ஒரு விதமான உபகாரமும் செய்யவில்லை.

இவ்வாறு இருந்தால் எப்படி அவன் மனம் குளிரும்? குழந்தை தத்தித் தத்திக் கீழே விழாமல் நடக்கத் தெரிந்து கொண்டால் தாய் மகிழ்ச்சி அடைகிறாள். மழலைச் சொல்லாலே, 'அம்மா' என்று குழந்தை கூப்பிட்டால் அதனைக் கேட்டு எல்லையில்லாத ஆனந்தம் எய்துகிறாள். பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தவுடன் வகுப்பிலேயே முதலாக இருக்கிறான் என்று சொல்லக் கேட்டால் அவள் உள்ளமெல்லாம் குளிர்ந்து போகிறாள். அந்தக் குழந்தை படித்துவிட்டு நல்ல உத்தியோகத்திற்குப் போய்விட்டால் அவள் அடைகின்ற மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாமல் போய்விடுகின்றது. தன் குழந்தை நல்லவன் என்று பிறர் கூறக் கேட்கும்

வேதத்தினால் ரிஷிகளையும், ஓமத்தினால் தேவர்களையும், சிரார்த்தத்தினால் பிதுர்க் களையும், அன்னத்தினால் அதிதிகளையும், புலிமூலம் பூதங்களையும், உழைப்பினால் தன் எஜமானனையும், தரிசனத்தால் தெய் வங்களையும், பிரியத்தால் பெற்றோர் களையும், அன்பால் மனைவியையும், கண்டிப்புடன் கூடிய பாசத்தால் பிள்ளை களையும் திருப்தி செய்ய வேண்டும்.

No greater gain than virtue aught can cause;
No greater loss than life oblivious of her laws. 32

பொழுதெல்லாம் அவள் அடைகிற இன்பம், அக் குழந்தையைப் பெற்ற காலத்தில் அடைந்த இன்பத்தையும் விட மிக அதிகமானது என்று வள்ளுவர் சொல்கிறார்.

அதைப்போன்று எல்லா உலகத்திற்கும், எல்லாக் காலத்திற்கும், எல்லா ஜீவன்களுக்கும் பரம மாதாவாக விளங்குகின்றவன் ஆண்டவன். இந்த உலகத்தில் எல்லா உயிர்களும் எந்த எந்த வகையில் முடியுமோ, அந்த அந்த வகையில் சிறந்து விளங்கினால் அது அவனுக்குப் பேருவகையைக் கொடுக்கும். அதனால் அவன் உள்ளம் குளிரும். "இவன் மிகவும் நன்றாகப் பேசுகிறான்; இவனுக்கு மேலும் மேலும் நன்றாகப் பேசக் கற்றுக் கொடுக்க வேண்டும்" என்று தோன்றும்.

ஒரு தாய், தன் மகன் தினமும் பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது இரண்டணாக் கொடுத்து அனுப்புவாள். மத்தியான வேளையில் வயிறு பசித்தால் ஏதாவது வாங்கித் தின்னட்டும் என்று அப்படிச் செய்வாள். பையன் பள்ளிக்கூடத்தின் வாசலுக்கு எதிரே ஒரு கிழவி ஊசற் கடலையைக் கொண்டு பண்ணின சுண்டலை விற்றுக் கொண்டிருந்தாள். அதனை வாங்கித் தின்றான். இரண்டு மூன்று நாள் சாப்பிட்டான். உடனே அவனுக்கு உடல் நலிவு வந்துவிட்டது. தலைவலி என்றான்; உடம்பு வலி என்றான். பள்ளிக்கூடம் போகாமல் வீட்டிலேயே படுத்துக் கொண்டு விட்டான்.

தாய் என்ன நினைப்பாள்? 'ஏதோ நல்ல பொருளாகப் பசி நேரத்திற்கு வாங்கிச் சாப்பிடட்டும் என்று இரண்டணாக் கொடுத்தால் இந்தப் பையன் உடம்புக்கு ஆகாத பொருளை வாங்கிச் சாப்பிட்டுவிட்டான் போலிருக்கிறது. வாந்தி எடுக்கிறான். இனி இவனுக்குக் காசு கொடுத்துப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பக் கூடாது' என்று தானே நினைப்பாள்?

இறைவன் நமக்கு நல்ல வாயைக் கொடுத்து, பேசும் ஆற்றலையும் கொடுத்து அனுப்புகிறான். அந்த நாக்கை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டால் அவன் மிகவும் மகிழ்ச்சி அடைவான். மேலும் மேலும் நன்றாகப் பேச்சு வளரும்படி செய்வான். தாய் இரண்டணாக் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பி பிள்ளையாண்டான் ஊசற் கடலையை வாங்கித் தின்று உடம்புக்குத் தீங்கு தேடிக் கொண்டபோது தாய் தான் கொடுத்து அனுப்பிய இரண்டணாவைக் கொடுக்காமல் நிறுத்தி விட்டதுபோல, ஆண்டவன் நமக்குக் கொடுத்தனுப்பிய நாவைக் கொண்டு அவனுடைய திருநாமத்தைப் பேசாமல், பேசத் தகாதன எல்லாம் பேசிப் பிறருடைய மனத்தைப் புண்படுத்திக் கொண்டிருந்தால், அவன் நம்மை ஊமையாக்கிவிடுவான்.

பொல்லாத பேச்சுக்களில் நான்கு வகை உண்டு. கடுமையாகப் பேசிப் பிறர் மனம் புண்படும்படிச் செய்வது ஒரு வகை. பயன் இல்லாத சொற்களைப் பேசுவது ஒரு வகை. ஒருவனைக் காணதபோது இகழ்ந்து பேசுவது ஒரு வகை. பொய் சொல்வது ஒரு வகை. இந்த நான்கு வகையாகப் பேசுவதையும் ஒழித்து இவற்றிற்கு மாறான பேச்சைப் பேசவேண்டும். பிறர் மனம் உவகை கொள்ளும்படி இன்சொல்லைப் பேசவேண்டும்; மெய்யைப் பேசவேண்டும்; புறங்கூறாமல் நேரே நயமாகச் சொல்ல வேண்டும்; பயனுள்ளவற்றையே பேசவேண்டும்.

நாம் எதையேனும் வாயில் போட்டுக் கொண்டு அதைத் திரும்ப வெளியில் துப்பினால் அதனை எச்சில் என்று சொல்லுகிறோம். உடம்புக்குள் போன எந்தப் பொருளாகட்டும், எந்த வழியாக வெளியே வந்தாலும் அதனை எச்சில் என்றோ, மலம் என்றோதான் சொல்கிறோம். நம்மிடமிருந்து வெளிவரும் அழுக்கை நாமே அருவருத்து ஒதுக்குகிறோம்.

ஆனால் உடம்புக்குள் இருந்து வெளியே வருவனவற்றுள் சிறந்த ஒன்று, எச்சில் படாத ஒன்று, மலமாகாத ஒன்று பேச்சுத்தான். அந்தப் பேச்சைச் சரியான படி சொன்னால் எல்லோரும் கேட்பார்கள். உடம்புக்குள் இருந்து வெளி வருகின்ற எல்லாவற்றையும் எச்சில் என்றும், மலம் என்றும் சொல்லி வெறுக்கும் மனிதர்கள் விரும்பிக் கேட்டு அநுபவிக்கக் கூடியது பேச்சு.

அவ்வளவு அருமையான நமக்குக் கிடைத்திருக்கும் பேச்சைப் பிறருடைய மனம் புண்படும்படியாகப் பலர் பயன்படுத்துகிறார்கள். குழந்தை தங்கக் கிண்ணத்தை எடுத்து வீதியில் போகிற நாயை அடிக்கிறமாதிரி தான் இருக்கிறது அது.

இறைவனுடைய அருளினால் பெற்ற வாக்கை, அவனுடைய திருவருளை நினைந்து பாடுவதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே மிகச் சிறந்த பயன்.

கிரஹஸ்தனாக இருப்பவன் ஒரு வஸ்திரத்துடன் உணவு உட்கொள்ளலாகாது. துணி உடுத்தாமல் குளிக்கக் கூடாது

# முருகப் பெருமான் தகரை ஊர்தியாகக் கொண்ட வரலாறு

சூரராதியரை அழிக்குமாறு அவதரித்த முருகவேள் கைலையங்கிரியில் எழுந்தருளியிருக்கையில் நாரதமுனிவர் பூமியில் சிவபெருமானை உவப்பிப்பதொரு வேள்வியாற்றினர். அவ்வேள்வித் தீயினின்றும் ஒரு ஆட்டுக்கடா தோன்றிற்று. அஃதெழுந்தமை, 'வேள்விக்கண் தங்களினங்கள் பலவற்றையும் பலருங் கொலை செய்கின்றமையால் யானிவ்வுலகத்தவரை அழிவு செய்வேன்' என்று மேலெழுந்த தோற்றம் போலவும், ஊழிக்காற்றும் ஊழித்தீயும் ஊழிக் கொண்டல்களின் இடியேறும் ஒருருக்கொண்டு வந்ததுபோலவும் இருந்தது. அவ்வாறெழுந்த ஆட்டுக்டா எல்லா வுலகங்களிலும் ஓடி உலாவி உயிர்களை ஒறுப்பதாயிற்று. அதுகண்ட தேவர்களும் முனிவர்களும் நாரதரும் கைலையங்கிரியையடைந்து என்றும் இளையராகிய ஆறுமுகப்பெருமானைத் தரிசித்து ஆட்டுக்கடாவின் கொடுமையைக் கூறிச் சரணமடைந்தனர். எம்பெருமான் அஞ்சற்க! என்று அபயந்தந்து வீரவாகு தேவரை நோக்கி அத்தகரினை விரைந்து பிடித்துக்கொணருதி என்று கட்டளையிட அவர் அவ்வாறே பூவுலகில் வந்து அதனைத் தேடிச் காணாமையால் மேலுலகங்களில் தேடிக் செல்லுகையிற் பிரமனுலகில் அது செல்லக்கண்டு அவண் விரைந்து சென்று அதனைக் கோட்டிற் பற்றிக் கொணர்ந்து குமரவேள் முன்னிலையில் விடுத்து வணங்கினர். குமரவேள் அத்தேவர்களதும் முனிவர்களதும் வேண்டுகோளின்படி அத்தகரினைத் தமக்கு ஊர்தியாகக் கொண்டருளினர் என்பதாம்.

## ஐராவதம்

இந்திரனுடைய வெள்ளையானை இது பாற்கடலில் தோன்றியது. நான்கு கொம்பு உடையது. இந்திரன் சூரனுக்குப் பயந்து ஒளித்த போது அமராவதிப்பட்டணத்தில் வந்த பானுகோபனுடன் யுத்தஞ் செய்த சயந்தனைத் தாங்கிச் சயந்தன் மூர்ச்சிக்கக் கண்டு பானுகோபன் உடலில்தாக்கிக் கொம்புகள் முறிந்து திருவெண்காட்டில் சிவபூசை செய்து முறிந்த தந்தம் மீளப் பெற்றது. இந்திரன் கந்தமூர்த்தியுடன் யுத்தஞ் செய்து தோற்றது கண்டு கந்தமூர்த்தியைத் தாங்கத் தவஞ் செய்து தாங்கும்பேறு பெற்றது. அட்டதிக்குக் கஜங்களுள் ஒன்றாய்க் கிழக்குத்திக்கில் உள்ளது. துர்வாச முனிவரின் சாபத்தால் ஒரு முறை காட்டானையாயிற்று.

To finish virtue's work with ceaseless effort strive,
What way thou may'st where'er thou see'st the work may thrive. 33

# அமர்நீதி நாயனார்

- சிவ. சண்முகவடிவேல்-

*திருச்சிற்றம்பலம்*

*நாட்கொண்ட தாமரைப் பூந்தடம் சூழ்ந்தநல் லூரகத்தே*
*கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்*
*வாட்கொண்ட கண்ணி மனைவி யொடங்கோர் வாணிகனை*
*ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றோவிவ் வகலிடத்தே*

இது வாய்மை திறம்பா வாகீசர் வாக்கு. திருநல்லூர்ப் பெருமானுக்குச் சாத்திய பாமாலையில் தொடுத்த ஞானமலர்களில் ஒன்று.

சோழ நாட்டிலுள்ள திருப்பதிகளில் ஒன்று பழையாறை. பழையாறை, பாரில் பன்னெடுங் கால் பெருமையோடு திகழ்ந்தது.

சோழ நாடு காவிரிநதியால் நன்னாடாகத் திகழ்வது காவிரி நதிக்கு உரித்தாதலால் பழையாறை பெருமை மிக்க சோழ அரசர் சொத்து. பழையாறையில் களிப்பு மிக்க வண்டுகள் மேகம் போல் விளங்குவன. நறுமண மலர் தாங்கிய சோலைகள் எங்கும் சூழ்ந்திருப்பன. மாலைகள் பொருந்திய தேர்கள் செறிந்திருப்பதால் வீதிகள் சிறந்து விளங்குவன.

பழையாறையைச் சேர்ந்தவர் அமர்நீதியார் வணிகர் குலத்தில் வந்து அவதரித்தவர். அமர்நீதியார். சிவபெருமானுடைய சேவடி அன்றி மற்று ஒன்றையும் மனத்தில் மதியாதவர். கிடைத்த செல்வத்தைச் சிவார்ப்பணமாக்கிக் கொள்வதால் பிறவிப்பயனைப் பெற்றுக்கொள்பவராவார். சிவனடியார்களைத் திருவமுது செய்விப்பது மண்ணினிற் பிறந்தார் பெறும் பயனாகக் கருதுவார். அடியார் கருத்து அறிந்து, கந்தைகீளுடை, கோவணம் கொடுக்கும் கொள்கையராவார்.

திருநல்லூரில் சிவபெருமானுடைய பெருவிழா ஆரம்பமானது. திருவிழாவினைச் சேவிக்க அடியார்கள் நாலாபக்கங்களில் இருந்தும் வருவார்கள். அவர்களுக்கு ஏற்படும் குறைகளைக் களைவதைத் தமது தலையாய கடமையாகக் கருதினார் அமர்நீதியார்.

அமர்நீதியார் திருநல்லூரில் திருமடம் ஒன்றை அமைத்தார். தாமும் சுற்றமுமாகத் திருநல்லூரை வந்து அணைந்தார். திருவிழாவைச் சேவித்தார். உருகும் உள்ளமும் மகிழும் மனமுகமாகத் திருமடத்தில் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்தார். கந்தை கீளாடை ஆகியவற்றை வந்தவர்களுக்குத் தந்தார்.

ஒருநாள் திருநல்லூர்ப் பெருமானே அமர்நீதியார் மடத்திற்கு எழுந்தருளினார். தம்மை மறைத்துப் பிரமசாரியின் வடிவத்தில் வந்தார் மதி வாழும் சடையார். அவர் திருக்கோலத்தை என்னென்பது?

செஞ்சடா முடியை மறைத்த திருமுடி ஒளிவிளங்கத் திரிபுண்டரமாகத் தரித்த திருநீறு. மார்பில் மான்தோலுடன் கூடிய முப்புரிநூல். திருவிரலினிடமாக மரகதம் போல ஒளி காலும் பவித்திரம். திருவரையில் முற்சிப் புல்லாலான அரைஞாண். அதில் வேதக் கோவண ஆடையின் பிணிப்பு. மெய்யடியார்கள் நெஞ்சை விட்டு நீங்காத திருவடி நீண்ட நிலத்தில் தோய்ந்தது. திருக்கையில் ஒரு தண்டு. தண்டில் இரண்டு கௌபீனம், திருநீற்றுப்பை, கொஞ்சம் தருப்பை ஆதியன பிணிக்கப்பட்டுக் காணப்பட்டது.

அமர்நீதியார் திருமடத்தில் பிரமசாரியாரைக் கண்டார். ஆனந்தம் கொண்டார். அகமும் முகமும் மலரக் கண்ணீரை விண்டார். பாதங்களில் பரிவோடு பணிந்து எழுந்தார். இந்த மடத்தில் என்றும் காணப்படாதவராக வந்துள்ளீர்கள். உங்கள் வருகைக்கு நான் செய்த தவம் தான் யாதோ? என்று இனிய வார்த்தைகளினால் மனம் குளிர ஆராதித்தார்.

"நீர் அடியவர்களுக்கு அமுது அருத்துகின்றீர். கந்தை, கீள்உடை, கோவணம் கொடுப்பதாகக்

> அக்கினியில் விதிப்படி செய்யப்பட்ட ஹோமம் சூரியனை அடைகின்றது. சூரியனிடமிருந்து மழையும், மழையிலிருந்து உணவு உற்பத்தியும், உணவு உற்பத்தி பெருக்கத்தால் பிரஜைகளுக்கு சுபிட்சமும் உண்டாகின்றது.

> மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்துஅறன்;
> ஆகுல நீர பிற. 34

கூறுகின்றார்கள். நாமும் உம்மைகாணிய வந்தனம்" என்றார் பிரமசாரி.

"இத் திருமடத்தில் நான் மறைத் தவசீலர்கள் அமுது செய்வார்கள். சிறந்த வேதியர்கள் தூய்மையாக அமைப்பதும் உண்டால். நீங்களும் இன்று இங்கு அமுது செய்யுங்கள் என்று கூறி அமர்நீதியார் வணங்கினார்.

"காவிரியின் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி வருவேன் மழை வந்தாலும் இந்த உலர்ந்த கோவணத்தை வைத்து நீர் தாரும்" என்று உரைத்த பிரமசாரியார் தண்டினில் அவிழ்த்து ஒரு கோவணத்தைக் கொடுத்தார். அமர்நீதியார் கையில் வாங்கிப் பாதுகாப்பாகச் சேமித்து வைத்தார்.

மறையவர் தெண்திரைப் பொன்னியில் தீர்த்தமாடி வரச் சென்றார். சென்ற வேதியர் அமர்நீதியார் பாதுகாத்து வைத்த கோவணத்தை மறைத்தருளினார்.

பிரமசாரி மழை நீரில் நனைந்து அமர்நீதியார் மடத்திற்குத் திரும்பினார். "காவிரியில் கலந்து நீராடினேன். மழை நீரும் நனைந்து விட்டது. தண்டில் கட்டிய கோவணம் ஈரம். நான் தந்த கோவணத்தைக் கொண்டு வருவீர்" என்றார் கோவணக் கள்வர்.

அமர்நீதியார், ஐயர் கள்ளத்தைக் கருத்தில் கொள்ளார். கோவணத்தை எடுத்து வரச் சென்றார். வைத்த இடத்தில் கோவணத்தைக் கண்டிலர். திகைப்போடு எங்கும் தேடினார். கைக்கு அகப்படவில்லை. அமர்நீதியார் முனிவர் சாத்துவதற்கு வேறு ஒரு கோவணத்தோடு வந்தார்.

"அமர்நீதியார்! நான் தந்த கோவணத்தை நீர் எடுத்துக் கொண்டீர். உம்முடை வாணிகம் மிக நன்று" என்றார்.

"சிறிய என் பெரும் பிழையைப் பொறுக்க வேண்டும்'' என்று முனிவருடைய பாதங்களில் பணிந்தார் அமர்நீதியார் "நல்ல பட்டாடைகள், அளவில்லாத மணிகள் தருவன் ஏற்றுக் கொண்டு என் பிழை பொறுக்க வேண்டும்"

"நான் தரும் கோவணத்திற்குச் சமனான கோவணம் தர அமையும். இதற்குச் சமனான கோவணம் தாரும்."

அமர்நீதியார் ஒரு துலையினை நிலைநாட்டினார். மறை முனிவர் கோவணத்தை ஒரு தராசுத் தட்டில் இட்டார். அமர்நீதியார் துலையின் எதிர்த் தட்டில் தமது கோவணத்தை வைத்தார். தட்டு நேர்படாமை கண்டார்.

> பசுவானது தன் கன்றுக்குப் பால் கொடுக்கும் சமயத்திலும் தண்ணீர் குடிக்கும் சமயத்திலும் தடை செய்யக் கூடாது.

அமர்நீதியார் கோவணத்தை ஒன்று ஒன்றாகத் தராசுத் தட்டில் இட்டார். ஏனைய பூந்துகில் பொதிகளை வைத்தார் தட்டு நேர்படவில்லை. "என்னுடைய ஏனைய தனங்களை இடுவதற்கு அனுமதிக்க வேண்டும்.'' என்றார்.

"எங்கள் கோவணம் நேர் நிற்பதற்கு தனங்களையாவது வைப்பீர்" என்றார் மறைமுனிவர். அமர்நீதியார் இட்ட தனங்களை கொண்ட தட்டு தாழவில்லை.

"தலைவரே! யானும் என் மனைவியும் சிறுவனும் தட்டில் ஏறுவோம்.

மறைமுனிவர் அதற்கு உடன்பட்டார். "துலை எனுஞ்சலத்தார் இச்சழக்கினின் றேற்றுவா ரேறுதற் கிசைந்தார்.

அமர்நீதியார் முனிவரை வணங்கினார். அஞ்செழுத்து ஓதினார். திருநல்லூராரை நெஞ்சில் நீள நினைந்தார். மனைவியார் புதல்வனோடும் தட்டில் ஏறினார்.

நல்லூர்ப் பெருமானுடைய திருவரைக் கோவணமும் கொண்ட அன்பில் குறைவுபடாத தொண்டும் சமப்படுதலால் கோவணத் தட்டிற்கு நேர் நின்றது.

மண்ணவர்கள் துதிசெய்து தொழுதார்கள் விண்ணவர்கள் புதிய பூ மழை பொழிந்தார்கள். மறை முனிவர் மறைந்தார் அம்மை அப்பர் கோலம் கொண்டார். திருநல்லூரில் பண்டு தாம் பயிலும் வடிவுடன் விண்ணில் வெளி நின்றார்.

அன்பரும் மனைவியும் மைந்தரும் என்றும் இன்பம் பெருக ஒன்று காதலித்து உடன் இருக்க அழிவில் வான்பதம் அருளினார் அம்மையப்பர்.

நற்பெருந் துலையே விமானமாயது. மேல் கொண்டு எழுந்து சென்றது. அமர்நீதி நாயனாரும் குடும்பமும் முழுமுதற் பரம்பொருளோடு சிவபுரியினை அடைந்தார்கள்.

அந்நிகழ்வைச் சேக்கிழார் ஆக்கித்தரும் செந்தமிழ் செய்யுள் இது.

*நாதர் தந்திரு வருளினா னற்பெருந் துலையே*
*மீது கொண்டெழு விமானம தாகிமேற் செல்லக்*
*கோதி லன்பருங் குடும்பமுங் குறைவறக் கொடுத்த*
*வாதி மூர்த்தியா ருடன்சிவ புரியினை யணைந்தார்.*

*திருச்சிற்றம்பலம்*

> Spotless be thou in mind! This only merits virtu's name;
> All else, mere pomp of idle sound, no real worth can claim. 34

# திருவாரூர்ப் பழமொழிப்பதிகம்

- முருகவேபரமநாதன் -

நாட்டார் வழக்கியலில் பழமொழி ஒரு அங்கம். உலக மொழிகளில் இம்மரபு முக்கியத்துவம் வகிக்கிறது. இப்பழமொழிகள் அனுபவப் பிழிவானவை. நாளாந்த வாழ்விலும் நவையறு தமிழ் இலக்கியங்களிலும் வழக்கில் உள்ளன இவற்றைப் பீடிகையாக வைத்துப் புதுமொழிகளை ஆக்கியுள்ளனர். பதினெண் கீழ்க்கணக்கிற் பழமொழி நானூறு என்பதும் ஒன்று. இப்பழ மொழிகள் பக்தி இலக்கியங்களிலும் எடுத்தாளப்பட்டுளன. சுந்தரர், திருமங்கையாழ்வார், திருநாவுக்கரசர் பாடல்களில் பொருளாழம் நிறைந்த பழமொழிகள் கருத்து வெளிப்பாட்டுக் கருவியாய் அமைந்துள்ளன. இவ்வியாசத்தில் அப்பர் பெருமானின் ஆளுமையிலமைந்த பழமொழிகளை அவதானிப்போம்.

சுவாமிகள் மருணீக்கியாராகப் பிறந்து, தருமசேனராகி, நாவுக்கரசரென எம்பெருமானால் அழைக்கப்பட்டவர். சம்பந்தர் அவரை அப்பர் என ஆராமையோடு அழைத்தார். செய்யுள் யாப்பிற்புதுமை செய்த நாவேந்தரை, தாண்டக வேந்தர், தாண்டக சதுரர் எனவும் அழைத்தனர். ஆளுடை அரசு சைவத்தினின்றும் நீங்கிச் சமணத்தைத் தழுவி மடத்தலைவராயும் வாழ்ந்தவர். பின் இறையருளால் மீளவும் சைவம் சார்ந்தார். சமணராய் வாழ்ந்த எல்லையில் சிவனை மறந்தார். இதை நினைந்து நினைந்து உருகிப் பாடிய பாடல்கள் அங்குமிங்குமாக இறைந்து கிடப்பினும் திருவாரூர்ப்பதிகத்தில் அந் நெறிப்பிறழ்வு பளிச்சிடுவதுடன், கழிவிரக்கமும் புலப்படுகிறது. தன்பிழை கண்டு நொந்து கழுவாய் தேடுமாற்றால் இப்பதிகம் எழுந்ததோ என்றெண்ணும் படிக்கும் பதிகம் படிப்பவர் நெஞ்சைத் தொடுகிறது. தன் நிலையைப் பத்துப்பழ மொழிகள் வாயிலாய்ப் புலப்படுத்தி விமோசனம் பெறுகிறார். இனி அப்பர் வாக்கிற் காண்போம்.

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள்தொழாதே
உய்பலா மென்றெண்ணி யுறிதூக்கி யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூரரைக்
கையினாற் றொழா தொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனே 1

சமண சமய கோலங்கள் மயிற்பீலி, முண்டிதம், கரகம் (நீர்ப்பாத்திரம்) என்பன. இந்தக் கோலம் தாங்கிய நான். வெண்ணீறணிந்த சிவபிரானது திருவடிகளை வணங்காதிருந்தமை. கனியிருக்கக்காய் கவர்ந்த மாதிரியேதான் எனக் கூறும் போது கள்ளவனேன் என்கிறார். இறைவனே உள்ளம் கவர். கள்வன். இப்பாடலிலேதிருடன் என்ற பொருள் தொனிக்கிறது. அரும் பாதகன், பொய்யன், கள்வன் என மதுர கவியும் கள்வன் கடியன் என மாணிக்கவாசகரும் பேசுகின்றனர். கனிபயனுள்ளது. தின்றால் மெத்தென்றிருக்கும். காய்பிர யோசனனமாற்றது கடினசொல், மென்சொல் பற்றி வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று திருக்குறள் 100

இதற்கு உரைகண்ட பரிமேலழகர் இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனி போல அமிழ்தானவற்றை. இன்னாத காய்களென்றது காஞ்சிரங்காய் போல நஞ்சானவற்றை. கடுஞ்சொற் சொல்லுதல் முடிவிற்றனக்கே இன்னாதென்பதாம் எனக்கூறியுள்ளார். இன்சொல் – வன்சொல் "இன் சொலாலன்றி இரு நீர் லியனுலகம் வன் சொலாலென்றும் மகிழாதே" என்ற நீதி நெறியையும் ஒன்று சேர்த்துப் பார்ப்போம். இந்த வாழ்வமைதியை

தேவாலய நந்தவனங்களில் துளசிச் செடியையும், வில்வ மரத்தையும், வைத்துத் தினசரி நீர் ஊற்றி வளர்ப்பவன் ''அசுவமேத யாகம்'' செய்த பலன் அடைவதுடன் தனது கோத்திரம் விருத்தியடைந்து உலகத்தில் ஐஸ்வர் யங்களையும் பெற்றுப் புகழுடன் வாழ்கிறான்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். 35

"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் தர்மசாஸ்திரப் பற்று உள்ள அறிஞர்கள் கூறியுள்ளதால் கோவில்களின் புனிதத்தைக் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

விட்டு இன்னோர் அமண் வாழ்வியலுக்குப் போனதை முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறே என்ற ஏமாற்று நிலையை இனி வரும் பாடலிற் பேசுகின்றார்.

என் பிருத்தி நரம்பு தோல் புகப்பெய்திட் டென்னையோ ருருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட் டென்னுள்ளங் கோயிலாக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண் டருள்செய்த வாரூ ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல் விட்டுக் காக்கைப்பின் போனவாறே 2

என்பு, தசை, நிணம், நாடி நரம்பு குருதி சேர்த்துத் தோலாற் போர்க்கப்பட்ட இவ்வுடம்பின் சிறுமையையும், அதிலே கோயில் கொண்ட எம் பெருமான் பெருமையையும், இனிமையான மானிட சென்மத்தைத் தந்த தயாமூலதன்மநிதியைவிட்டு, புறம்போன நிலையையுன்னிப் பேசும் சுவாமிகள் காயமே கோயிலாக எனப்பாடிய அருட் பிரபாஷத்தையும் நாமிங்கே கவனித்தற்பாற்று. மணிவாசகரும் (கூழ்–கூழை, படையுறுப்பு)

மொய்ப்பால நரம்பு கயிறாக முளை
என்பு தோல் போர்த்த
குப்பாயம் (குப்பாயம் – சட்டை)
சீவார்ந் தீ மொய்த் தழுக்கொடு திரியுஞ்
சிறுகுடில்
மிடைந் தெலும் பூத்தை மிக்கழுக் கூறல்
வீறிலி நடைக் கூடம் (ஆசைப்பத்து)

என்று அருளிப் போந்தார்.

பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாந்த குண்டர்கள் தஞ் சொல்லே கேட்டு
உருகுவித் தென் னுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கி
அருகு வித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு பிணிதீர்த்த வாரூரர்தம்
அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே 3

குண்டர் – சமணர், அறம் – தர்மம், மறம் – அதர்மம். இந்த அதர்மத்தைப் பணம் கொடுத்து வாங்கல் உலக வழக்கிலில்லை. சிவவேளை அறியாமையால் தகாத காரியங்களை விலைக்கு வாங்கியும் விடுகிறோம். தானே போய் அமைதியீனத்தை வாங்குவதை, (வில்லங்கத்துக்கு) விலைக்கு வாங்கின மாதிரியென ஊர் வழக்கில் பேசுவர். சமணர் வார்த்தையால் பாவத்தை வாங்கி அல்லற்பட்டமையும், அந்த அனுபவத்தால் உருகிக்கழிம்பு போய்ச் சுத்தமான நிலையையும், மனக் கள்ளம் காடியால் நீங்கியதையும், பிணிகொடுத்துப் (சூலைநோய்) பிணி நீக்கிய வைத்தியநாதனின் அறக்கருணையையும், எண்ணி இறை மருங்கில் இருக்க முடியாமற் போன சூழலையும் நினைந்து தன்னைப்புடம் போட்டபாடல் இது. பாரதியும் "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற் கைதொட்டிச் சிரியாரோ" எனப்பாடிய கட்டமும் இங்கே ஒப்பீட்டிற்குரியதன்றே. அடுத்த பாடலில் பனி நீரைக் கொண்டு கடலையமைக்க முயன்ற செய்தி வருகிறது பனி நீர் முத்துப் போல் ஒளிரும் சூரியனைக் கண்டால் மறைந்துவிடும். இதைக்கொண்டு கடலை உண்டாக்கலாமா?

குண்டனாய்த்தலைபறித்துக்குவிமுலையாள்நகைநாணா துழிதர் வேனைப்
பண்டமாப்படுத்தென்னைப்பால்தலையிற்தெளித்துத்தன் பாதங்காட்டித்
தொண்டெலா மிசைபாடத் தூமுறுவ லருள் செய்யு மாரூரரைப்
பண்டெலா மறியாதே பனிநீரால் பரவை செய்யப் பாவித்தேன் 4

மலட்டுப் பசுவில் பாலே கிடையாது. இருட்டிலே மலடுகறந்து இளைப்பதைப் போன்று வெறும் சமயமான சமணையண்டி ஒரு பிரயோசனமும் இல்லா. அந்நிலையைவிட்டு ஆரூர்த்தியா கேசனை அண்டினால் எவ்வளவோ லாபம் அடைந்திருப்பேனேயென்றேம் பலிக்கும் பாடல் இது. இன்று வேற்றுமதம் புகும் நம்மவர் இதைச் சிந்திக்கட்டும்.

பப்போதிப் பவணனாய்ப் பறித்ததொருதலையோடே திரிதர்வேனை
ஒப்போட வோதுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்தங் குறுதிகாட்டி
அப்போதைக் கப்போது மடியவர்கட் காரமுதா மாரூரரை
எப்போது நினையாதே யிருட்டறையின் மலடுகறந் தெய்த்தவாறே 6

இன்னோர் புதுமையான பழமொழி. பாழூரிற்பயிக்கம் புக்கெய்த்தல். ஆட்களேயில்லாத பாழடைந்த ஊரில் (பயிக்கம்) பிச்சையெடுக்க முடியாது. வீண் அலைச்சலேயன்றி எட்டுணையும் பிரயோசனமே இல்லை இவ்வாறே செப்புக்காசைக் கொண்டு தலைமயிரைப் பிடுங்கி மொட்டையாய்த்திரியும் சமணர்களின் கூட்டத்திற் சேர்ந்ததும் என்று பேசுகிறார் அப்பர் சுவாமிகள்.

பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற சமணீசர் சொல்லே கேட்டுக்
காவி சேர் கண்மடவார்க் கண்டோடிக் கதவடைக்குங் கள்வ னேன்றன்
ஆவியைப் போகாமே தவிர்த்தென்னையாட் கொண்ட வாரூரரைப்
பாவி யேனறியா தே பாழூரிற் பயிக்கம்புக் கெய்த்த வாறே 8

# இறையுணர்வுக்குப் பட்டர் பிரான் காட்டும் மூவகை உபாயங்கள்

- இலக்கிய வித்தகர், சைவப் புலவர் அநு. வை. நாகராஜன் -

இறையுணர்வு எனும் மெய்ஞ்ஞானத்தைப் பெறுதற்கு, அநுதிமான்கள் தமது பட்டறிவினால் சன்மார்க்க நடைமுறைகளை உணர்த்திப் போயினர். இவ்வடிச் சுவட்டில்–

கி. பி. 18ம் நூற்றாண்டின் முற்கூறில் வாழ்ந்த "அபிராமி பட்டர்" எனுந் தேவி உபாஸகர், தமது திவ்விய பனுவல்கள் மூலம் இறை தத்துவங்களை எளிதாக, எமக்குத் தந்துள்ளார். வகைக்கு ஓர் எடுத்துக்காட்டை இங்கு நோக்குவோம்.

பட்டர் பிரான் தமது –

"சென்னியது உன்பொன் திருவடித் தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்; சிந்தூர வண்ணப் பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடிமுறை முறையே
பன்னியது என்றும் உன்றன் பரஆகம பத்ததியே"

என்னும் அந்தாதிப் பாடல் ஒன்றில், தேவியை நோக்கி விளிக்கிறார்.

இப்பாடலில் அவர், இறைவியின் நாமத்தை (திருமந்திரத்தை)யும் ; மெய்யடியார் நேசத்தையும் ; மெய்ஞ்ஞான நூல்களை (ஆகம பத்ததிகளை)யும் தன் சிந்தனையில் வழுவாதிருக்க வேண்டுகிறார். ஈண்டுக் கூறிய மூன்றும், ஒன்றையொன்று இணைந்து நிற்பவையாம். அதாவது – ஒன்று, ஒலி அல்லது நாதம் ; மற்றது, ஸ்பரிஸம் அல்லது உணர்வின் தொடுகை. இறுதியாகக் குறிப்பது, அண்மையாகவும் சேய்மையாகவும் நின்று பயிலப் பெறும் நூலறிவாம். இதனை இன்னொரு வகையில் விபரித்துக் கூறின்–

திருமந்திரம் – இறை நாமத்தை அல்லது இறை கீர்த்தியை ஒலியுணர்வினால் உச்சாடனஞ் செய்யத்தக்கதாய், ஒழுங்குற வகுக்கப் பெற்ற நாத வடிவமாகும். இந்நாதம், பிரம்மத்தின் உணர்வை உருப்படுத்தும். உந்திக் கமலத்தில் (நாபியில்) உயிர்க்கும் மூச்சொலி, நாடி நரம்புகளைத் தட்டிக் கிளறி–எழுப்பி, உச்ச நிலை–மத்திம நிலை–மந்திர நிலை எனும் மும்முனை நிலைகளில் ஏறி இறங்கி குரல்வளை ஊடாக வந்து. வாயால் வெளிப்படும். அப்பொழுது, அதனை குரலோசை என்போம். இதன் ஆரோகண அவரோகண (ஏற்ற இறக்க) ஓசையில், உணர்வின் உயிர்ப்பு இருக்கு. இவ்வுயிர்ப்பே, இறையுணர்வின் மூலமாகிறது. இதனையே இறை நாதம் என்பர். இந் நாதத்தை, இறை நாதமாக – இறை கீர்த்தியாக உருப்படுத்தி உச்சாடனஞ் செய்யும் பொழுது, அவ்வொலி இறை ஞானமாகத் தொழிற்படும். இவ்விறை ஞானம், ஊன்–உடல்–உணர்வோடு சங்கமிக்க ஆன்மீகவொளி பிறக்கும். அதுவே, ஞானவொளி. ஆன்மவொலியால் முகிழ்த்த ஆன்மீகவொளி, ஆன்ம பக்குவத்துக்கு இட்டுச் செல்லும். இவ்வினிய நோக்கை அடிநாதமாகக் கொண்டதே மந்திர பாராயணம். இதன் பொருட்டே, மந்திர உச்சாடனம் சன்மார்க்க வழிக்கு ஓர் உயரிய உபாயமாகக் கொள்ளப் பெறுகிறது.

மேலும், சாதாரண மனிதன் இறை வழிப்பாட்டால் ஆன்ம ஈடேற்றங் கருதித் தனது பக்தியை விக்கிரக (தூல வடிவம்) வழிப்பாட்டாலும் ; யந்திர (வரி வடிவம்) வழிப்பாட்டாலும் ; பொருளும் சக்தியும் நிறைந்த சப்த உச்சாடனங் கூடிய மந்திர உப்ஸனை வழிப்பாட்டாலும் மனம்–வாக்கு–காயம் எனும் திரிகரணங்களைச் சீராக்கி, இறையின்பத்தை இலகுவிற் பெறுகிறான். மந்திர உபாஸனை சிந்தனையைச் சீராக்கி, ஆன்ம இன்பத்தை வெகு இலகுவில் நல்கும். இதனை மனங்கொண்டே, பட்டர் அடிகளும் தனது அந்தாதியில் "சிந்தையுள்ளே மன்னியது உன் திருமந்திரம்" எனச் சிறப்பித்து, மந்திர உபாஸனையை வலியுறுத்துகிறார். அடுத்து இங்கு குறிப்பிடப் பெறுவது, மெய்யடியார் சங்கமம் ஆகும். அஃதே, இறைவனின் இறையின்பத்தைப் பெற்ற அநுபூதிமான்களுடன் கூடிய உறவாகும். இவர் வழி சன்மார்க்க வழியாகும். இவரது எண்ணம், செயல் யாவும்

அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றுஅது
பொன்றும்கால் பொன்றாத் துணை. 36

இறை வழியாகவே விளங்கும். இவர்களால் ஆற்றுப் படுத்தப் பெறும் அடியார்களும் இறையின்பத்தை வெகு இலகுவிற் பெறுவார். கண்ணற்ற கபோதிக்கு ஊன்றுகோலைப் போல் – காரிருளில் கைவிளக்கைப் போல் – ஆற்றைக் கடக்க தோணி உதவுவது போல், பந்த பாசமும் அஞ்ஞானமும் செறிந்த உலகியல் வாழ்வில் மெய்ஞ்ஞானவொளி காட்ட வல்லவர்களே மெய்யடியார்கள். ஏனெனில், அம்மேன்மக்கள் ஏலவே இறையொளி பெற்றவர்கள். ஆதலின் அவர்கள் ஆசிரியர்கள்–ஆசான்கள்–அந்தணர்–அறவோர்–செந்தண்மை பூண்டொழுகுபவர். அன்னார்–வழியில் ஒழுகுபவர், அவர் நிலை எய்தி, இறையின்பம் பெறுவர் என்பது வெள்ளிடைமலை.

இந் நோக்கிலேயே, பட்டரும் மெய்யடியார் உறவை வேண்டி நின்றார். அதற்காக அன்னையிடம் "நினனடியாருடன் கூடி முறை" பன்ன வேண்டும் என்கிறார். அதாவது இறைவியை மறவாது தொழும் அடியார்களுடன் இணைந்திருக்க அருள் தர வேண்டும் என விண்ணப்பஞ் செய்கிறார். மேலும், இறை வழிக்கு மெய்யறிவு நூல்கள் வேண்டும் என்றுங் கூறுகிறார். மெய்யறிவைத் தர வல்ல நூல்கள், வேத–ஆகம நூல்கள் என்பதையே அவர் இங்குச் சுட்டி நிற்கிறார். இங்கு ஆகம நூல் எனச் சுட்டி நிற்பது, "பரம ஆகம பத்ததி" என்பதையேயாம். அஃதாவது, ஆகமங்களில் இருந்து சுருக்கித் தொகுக்கப் பெற்ற வழிபாட்டு முறைமையான நூல்களையாம். இறைவனால் அருளப் பெற்ற வேதாகம நூல்கள் மகரிசிகளாலும் மகான்களாலும் தொகுத்தும் சுருக்கியும் ஒழுங்கான முறையில் நெறிப்படுத்தப் பெற்றன. அது குறித்தே இங்கு பட்டர் பிரான் "பன்னியது உன்றன் பரம ஆகம பத்ததியே" என விளிக்கிறார்.

இந்நிலையில், அன்னையின் திருவடியைச் சூடி, திருமந்திரத்தைச் சிந்தனையில் தேக்கி, பரம ஆகமத்தை ஓதியுணர்ந்து நிற்கிறார். அடிகளார்.

இறையுணர்வு பெற விழையும் ஆன்மீகர்களுக்கும், எமக்கும் பட்டர் பிரான் காட்டும் திருமந்திர உபாஸனை உபாயம், மெய்யடியார் நேச உபாயம், பரமஆகம பத்ததிகளின் நூலறிவு உபாயம் ஆகிய மூவகை உபாயங்கள் எமக்கும் ஆந்துணையாய் முன்னிற்பதாக.

## எப்படி இருந்து உண்பது?

முன்துவ்வார் முன்னெழார் மிக்குறார் ஊணின்கண்
என்பெறினும் ஆற்ற வலம்இரார் தம்மில்
பெரியார்தம் பால்இருந்தக் கால்.

எந்தத் திசைபார்த்து அமர்ந்து உண்பது? எந்த இடங்களில் உண்ணுவது என்று கூறிய புலவர், பெரியோர்களுடன் பந்தியில் அமர்ந்து உண்ண நேரும்போது, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்குகிறார் இந்தப்பாடலில். தம்மில் வயதில் மூத்த, பெரியோருடன் அமர்ந்து உண்ணும் போது; அவர்கள் உண்ணத் தொடங்கும் முன்பு உண்ணக் கூடாது. அவர்கள் உண்டு முடித்து எழுவதற்கு முன் பந்தியிலிருந்து எழக் கூடாது. அவர்களுக்கு மிக நெருக்கமாக – இடித்துக் கொண்டு உட்காரக் கூடாது. உணவு வகைகளில், எவ்வளவு தான் அதிகம் படைக்கப் பட்டிருந்தாலும்; பெரியவர்கள் வலப்பக்கம் அமர்ந்து உண்ண நினைக்கக் கூடாது.

Do deeds of virtue now. Say not, 'To-morrow we'll be wise';
Thus, when thou diest, shalt thou find a help that never dies. 36

வள்ளுவத்தில் சைவ சித்தாந்தம்

# அகரமாகிய முதல்வன்

-சித்தாந்த ரத்தினம் க. கணேசலிங்கம் -

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு' – (குறள்.1)

இக்குறட்பாவை முதலாவதாகக் கொண்டு வள்ளுவரின் தமிழ்மறை தொடங்குகிறது. எல்லா எழுத்துக்களும் அகரத்தை முதலாக உடையன; அதுபோல் உலகம் இறைவனை முதலாகக் கொண்டுள்ளது என்பது இதன் பொருள்.

பிற எழுத்துக்களுக்கு இல்லாத சிறப்பு அகர எழுத்துக்கு உண்டென்பதை வள்ளுவர் இக்குறளின்மூலம் கூறுகிறார். அத்துடன் உலகிற்கு முதலான ஒருவன் உளன் என்பதையும் உணர்த்துகிறார்.

## அகரத்தின் தனி இடம்

அகரத்தை இறைவனுக்கு உவமையாகக் கொள்வதைப் பின்வந்த சைவ வைணவ நூல்களில் காணமுடிகிறது.

'அகர முதலானை அணியாப்ப னூரானை' – சம்பந்தர்
'அகர முதலின் எழுத்தாகி நின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே' – சுந்தரர்
'அகரமுமாகி அதிபனுமாகி அகமாகி' – அருணகிரிநாதர்
'எழுத்துக்களில் அகரமாகி நின்றேன்' – ஆழ்வார்

> ஒருவன் தான் ஆராதிக்கும் தேவதைகள் தான் பக்தி சிரத்தையுடன் வணங்கும் தெய்வங்கள், அதிதிகள், அகதிகள் வேலைக்காரர்கள், தாயார், தந்தை, பிதுர்க்கள், தன் ஆத்மா ஆகிய இவ்வொன்பது வகைக்கும் அன்னம் கொடுத்துத் திருப்தி செய்ய வேண்டும். திருப்தி செய்யாதவன் இருந்தும் இறந்தவனுக்கு ஒப்பாவான். இவற்றுள் அகதிகளை மட்டும் அரசன் பொது நிதியிலிருந்து காப்பற்ற வேண்டியவன்.

'அக்கரங்க ளின்றாம் அகர உயிர் இன்றேல்
இக்கிரமத் தென்னும் இருக்கு – மெய்கண்டார்

அகரத்தின் சிறப்புரைக்கும் சமய நூல்களுக்கும் எடுத்துக் காட்டாக திகழ்வது அவற்றுக்கு முன்வந்த திருக்குறளே என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் எழுத்துக்களுக்கு உயிர் போன்றவை உயிர் எழுத்துக்கள். உடம்பின் இயக்கத்தைக் கொண்டே உயிர் அறியப் படுகிறது. உடம்போடு உயிர் இருப்பினும் பார்ப்பவருக்கு முதலில் தெரிவது உடம்பே. அதன்பின்னரே அதனுள் இருக்கும் உயிர் அறியப்படுகிறது. இது போன்றே உயிர்மெய் எழுத்திலும் மெய் எழுத்தே கேட்போருக்கு முதலில் ஒலி வடிவாக அறியப்படுகிறது. பின்னரே அதனுடன் சேர்ந்த உயிரெழுத்தின் ஒலி அறியப்படுகிறது. இதனை 'மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே' என்று கூறி உயிர் மெய் எழுத்துக்களின் இயல்பையும், உயிர் உடல் உறவையும் ஒரு சேர விளக்குவது தொல்காப்பியரின் ஆழ்ந்த தமிழ்ப்புலமைக்கும் தத்துவ நோக்கிற்கும் சான்று பகரும். இது தமிழரின் அறிவியல் தத்துவ அணுகுமுறையையும் பிரதிபலிப்பது. இது போல் உயிர் அனாதியே உள்ள உள்பொருள் என்பது போன்ற கருத்தும், சைவசித்தாந்தம் காட்டும் வினைக்கொள்கையும் பிறவும் எழுத்துக்களின் இலக்கணம் கூறும் வகையால் தொல்காப்பியத்தில் உணர்த்தப்படுகின்றன.

இந்த வழியிலே அகரத்தின் தனிச்சிறப்பை விளக்கும்போது, 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' என்று கூறி மெய் எழுத்துக்களின் அசைவும் ஒலியும் அகர எழுத்தை ஒட்டியே அமையும் என்கிறார். (சிவணும் – பொருந்தும்). உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இதனைப் பின்வருமாறு விளக்குகிறார்.

'இறைவன் இயங்கு திணைக்கண்ணும், நிலைத்திணைக் கண்ணும், பிறவற்றின் கண்ணும்

> அறத்தாறு இதுஎன வேண்டா; சிவிகை
> பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. 37

அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும், அவற்றின் தனி மெய்க் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்ப முடிந்தது'. – (தொல் காப்பியம்; நச்சினார்க்கினியார் உரை).

பரிமேலழகர் தனது திருக்குறள் உரையில் 'அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாத மாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும்' எனக்கூறி அகரத்தின் முதன்மையை எடுத்துக் காட்டுகிறார்.

எமது பேச்சில் பிறக்கும் அனைத்து ஒலிகளும் அகர ஒலியை உட்கொண்டுள்ளன. அகரம் அவற்றுடன் கலப்பினால் ஒன்றாகவும், பொருளினால் வேறாகவும் உள்ளது. 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் என்ற தொல்காப்பிய விதிப்படி, எழுத்தொலிகளை இயக்குவதாக அமைந்து அவற்றுடன் உடனாகவும் உள்ளது. இங்ஙனமே, இறைவனும் உயிர்களுடன் உலகப்பொருட்களுடனும் ஒன்றாய் வேறாய் உடனாய் இருக்கிறான் என்பது சைவசித்தாந்தம் காட்டும் அத்துவித உறவு. அகரத்தை இறைவனுக்கு உவமையாக வள்ளுவர் காட்டியது அவரின் சித்தாந்த ஈடுபாட்டை உணர்த்துவது.

### ஓம் எனும் ஒலி

ஓம் என்னும் ஒலி மொழிக்கு முதலில் இயல்பாகத் தோன்றும் ஒலி என்று கூறப்படும். இதற்கு 'இயல் மொழி' என்றும் பெயருண்டு. அலை மோதும் கடலிலும், மரங்கள் அடர்ந்த தோப்பிலும் இதனைக் கேட்கலாம். யானையின் முகம் ஓங்கார வடிவுடையது; அதன் பிளிறலில் ஓங்காரம் ஒலிக்கும்.

ஓம் என்று சொல்வதற்கு வாயைத் திறந்தவுடன், முதலில் வருவது 'அ' என்ற ஒலி. அ – உ – ம் என்ற மூன்றும் சேர்ந்தே ஓம் என்ற ஒலி பிறக்கிறது. இந்த மூன்று எழுத்துக்களும் முத்தமிழ் என வழங்கப்படுகின்றன. 'முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில் முற்பட எழுதிய முதல்வோரின்' என்று அருணகிரிநாதர் பாடியது இந்த ஓம் என்னும் மந்திரம் குறித்தே. இதனால் மறைகளுக்கு மூலமானது ஓம் என்றும், அது தமிழ் என்றும், அதுவே முத்தமிழ் ஆகிறது என்றும் மறைமலையடிகளின் மாணாக்காரன அழகரடிகள் கூறுகிறார். (அழகரடிகள், 'சிவஞானபோத விளக்கம்; தொண்டமான் சக்கரவர்த்தி பதிப்பகம், சென்னை 6000 53)

அகரத்தின் சிறப்பு ஒலி அளவையால் மட்டுமன்றி வரிவடிவத்தாலும் அமைந்தது என்பதை பா. வே. மாணிக்கநாயகம் என்ற அறிஞர் தனது "The Tamil Alphabet and its Mystic Aspect" என்ற நூலில் விளக்குகிறார். (விரிவஞ்சி அதனை இங்கே தரவில்லை. இந்நூலின் தமிழாக்கம் "தமிழ் எழுதுக்களின் நுண்மை விளக்கம்" என்ற பெயரில் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினால் 1984 ல் வெளியிடப்பட்டது.)

மந்திரங்கள் ஒலி வடிவானவை. அவற்றுள் முதன்மையானது ஓம் என்னும் மந்திரம். அது மந்திரங்களின் வித்து, அல்லது முளை (பீஜ மந்திரம்) என்றும், பிரணவ மந்திரம் என்றும் அழைக்கப்படுவது. இதனை முதலில் அமைத்துப் பிறமந்திரங்களை உச்சரிக்க வேண்டும் என்பது பொது விதி. ஆயினும் சூக்கு பஞ்சாட்சரத்துக்கு ('சிவாயநம' வுக்கு) இது பொருந்தாது. மந்திர வேந்து என்றும் ராஜமந்திரம் என்றும் அழைக்கப்படுவது சூக்கும பஞ்சாட்சரம்.

அகர, உகா, மகரத்தை உள்ளடக்கிய ஓங்கார மந்திரம் ஒலிவடிவத்தால் மட்டுமன்றி வரிவடிவத்தாலும் அகரத்தில் அமைந்துள்ளது. இதனாலும் அகரத்துக்குத் தனிச்சிறப்பு உண்டாகிறது.

### சித்தாந்த விளக்கத்தின் முன்னோடி

இறை உண்மையையும் இயல்பையும் அகரத்தின் அடிப்படையில் விளக்கிய ஆன்றோர்களின் முன்னோடியாகக் கொள்ளத்தக்கவர் திருவள்ளுவர். மெய்கண்ட சாத்திர நூல்கள் எழுதயவருள் உமாபதி

> தண்ணீரில் உண்டாகும் எல்லாவித புஸ்பங்களுக்கும், வில்வ இலைகளும், துளசி பத்திரத்திற்கும் வெள்ளி, தங்கம் இவைகளால் செய்த புஷ்பங்களுக்கும் புண்ணிய நதி தீர்த்தங்களும் பழமையில் தோஷமில்லை. இவைகள் நாள் பட்டவையாக இருந்தாலும் இறைவனுக்கு அர்ப்பணிக்கலாம்.

சிவாச்சாரியருக்குத் தனியிடம் உண்டு. அவர் தனது திருவருட்பயனை, வள்ளுவரைப் பின்பற்றியே தொடங்குகிறார்.

'அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து – (திருவருட்பயன்.1)

உமாபதி சிவம் இறைவனை 'நிகரில் இறை' என்று குறிப்பதும் வள்ளுவரின் 'ஆதிபகவன்' என்ற தொடரின் அடிப்படையிலே என்று கருத வேண்டியுள்ளது.

மெய்கண்ட சாத்திரம் நூல்களில் முதன்மை நூலான சிவஞானபோதம் முதற் சூத்திரம் இறைவனை ஆதி என்று குறிப்பிடுகிறது.

"அவன் அவள் அவையெனும் அளவமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத் துளதாம்
அந்தம் ஆதி என்மானர் புலவர்"
(சிவஞானபோதம், சூத்.1)

திருக்குறளில் அகரத்தை இறைக்கும் எழுத்துக்களை உலகிற்கும் உவமையாக வள்ளுவர் காட்டுகிறார். "எழுத்தெல்லாம்" என்பதால் எழுத்துக்களை ஒரு தொகுதியில் பொருளாகக் காட்டி, அதனை உலகிற்கு உவமையாக்கியதால், உலகும் ஒரு தொகுதிப் பொருள் என்பதை வள்ளுவர் உணர்த்துகிறார். சிவஞானபோத ஆசிரியரான மெய்கண்ட தேவரும் "அவன் அவள் அது எனுத் அளவை" எனக் கூறி உலகை ஒரு தொகுதிப் பொருளாகவே காட்டுகிறார்.

உள்ளதுதான தோற்றும் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. இது சற்காரியவாதம் எனப்படும். (சத் – உள்ள பொருள், சத்தியப்பொருள்: காரியம் – (காரணத்திலிருந்து) வெளிப்படும் பொருள்; வாதம் – கொள்கை). இதிலிருந்து இல்லது தோன்றாது என்பது பெறப்படுகிறது. அழிதல் என்பது சித்தாந்தத்தில் ஒருங்குதல் என்றே பொருள் கொள்ளப்படும். பருப்பொருள் வடிவிலிருந்து நுண்பொருளாக (தூலத்திலிருந்து சூக்குமாக) நிலைமாறுதலில் அழிதல் அல்லது ஒடுங்குதல். இறத்தலும் பிறத்தலும் நிலைமாற்றங்களே. மாயாகாரியமான உடல் காரணப் பொருளான மாயையில் ஒடுங்குதல் இறத்தல். மீண்டும் முன்னைய நிலையை அடைதல் பிறத்தல்.

எவனொருவன் ஒடுக்குகிறானோ அவனே தோற்றுவிப்பான். காத்தலும் அவனே செய்வான். மற்றழிப்புக் காலத்தில் (மகாசங்கார காலத்தில்) படைப்பவனும் காப்பவனும் இல்லையேயாக அழித்தல் (அந்தம்) செய்யும் சங்கார காரகனாகிய சிவபெருமானே இறுதியில் இருப்பான். அவனே ஆதியான பரம்பொருள். இதனைப் பின்வரும் அப்பர் பெருமானின் தேவாரத்திலிருந்து அறியலாம்.

"பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும் போய்
இருங்கடல் மூடி இறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே."

சிவஞானபோதம் இதனையே 'அந்தம் ஆதி' என்ற தொடரால் அந்தம் (அழித்தல்) செய்பவனே ஆதியான பரம்பொருள் என்று விளக்குகிறது. இந்நூல்களுக்கு முன்வந்த திருக்குறள் "ஆதிபகவன்" என்று கூறி இதனை விளக்குவது குறிப்பிடத்தக்கது. பகவன் என்ற சொல் தொழப்படும் அல்லது பூசிக்கப்படும் பண்புடையவன் என்ற பொருள் குறிக்கும் என்பது அறிஞர் கருத்து. ஆதிபகவன் என்பதற்கு மூல காரணனாகிய இறைவன், ஆதிபரமேஸ்வரன் என்று பழம் பெரும் உரையாசிரியர்கள் பொருள் கண்டுள்ளனர். திருவள்ளுவர் போன்ற ஞானிகள் இந்தப் பொருளில் இறைவனைக் குறிப்பிடுகின்றனர். என்ற கருத்தில் "என்மானர் புலவர்" என்று சிவஞானபோத ஆசிரியர் கூறுகிறார்.

இவற்றை நோக்குமிடத்து, திருக்குறட் கருத்துக்கள் பின்வந்த சித்தாந்த நூல்களுக்குத் துணைபுரிந்துள்ளதாகக் காண முடிகிறது. திருவள்ளுவரின் நோக்கு சித்தாந்த நோக்கு என்பதும் பெறப்படுகிறது.

> நெருப்பை வாயினால் ஊதக் கூடாது. கை அல்லது ஓமக் குழலால் ஊத வேண்டும். அசுத்தமான வஸ்துவை நெருப்பில் போடக் கூடாது. துடிதுடிக்கும் புழு பூச்சிகளை நெருப்பில் போட்டுப் பார்ப்பது பிரமஹத்தி தோஷமாகும்.

> வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதொருவன்
> வாழ்நாள் வழியடைக்கும் கல். 38

# மகோற்சவ காலத்தில் ஓத வேண்டிய பண்ணும் பாடல்களும்

- நமர்

கொடியேற்றம், கொடியிறக்கம் நிகழும் காலத்தில் கொடி மரத்தருகில் கணபதி தாளத்தின் போது பாடப்படும்

பண் - தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுள்ளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென் கொலோ

பொடியுடைமார்பினர் போர் விடையேறிப்
பூதகணம் புடை சூழக்
கொடியுடையூர்திரிந் தையங்
கொண்டு பலபலகூறி
வடிவுடைவாணெடுங் கண்ணுமைபாக
மாயவன்வாழ் கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக்
கறைமிடற்றானடி காண்போம்

துணிவளர் திங்க டுளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ் செய்து பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ விவர் மாண்பே.

சிம்மதாளம்
பண் - நட்டபாடை

தோடுடைய செவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

வண்டார்குழ லரிவையொடு பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுர மதுவே.

நந்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமழு வானன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே.

விருஷப தாளம் - மூஷிக தாளம்
காந்தார பஞ்சமம்

ஆடினாய்நறு நெய்யொடு பாறயி
ரந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறை யோடு பல்கீதமும்
பல்சடைப்பனி கால் கதிர் வெண்டிங்கள்
சூடினாயருளாய் சுருங்கவெம தொல்வினையே

இடரினும் தளரினும் மெனதுறு நோய்
தொடரினு முனகழ றொழுதெழுவேன்
கடறனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவேவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதவோவுனதின் னருளாவமுதுறை யரனே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

மயூரதாளத்தின்போது
பண் - இந்தளம்

சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க வெனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே.

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.

f no day passing idly, good to do each day you toil,
A stone't will be to block the way of future days of moil 38

தலைக்குத் மலைமாலை அணிந்த தென்னே
சடைமேற்கங்கை வெள்ளம் தரித்த தென்னே
அலைக்கும் புலித்தோல்கொண் டசைத்த தென்னே
அதன்மேற் கதநாகம் கச்சார்த்த தென்னே
மலைக்குந் நிகரொப் பனவன் திரைகள்
வலித்தெற் றிமுழங் கிவலம் புரிகொண்
டலைக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழிலஞ் சைக்களத் தப்பனே.

பிரமசந்தி *(ஆலய வாசலில்)*
பண் - மேகராகக் குறிஞ்சி

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறசேர்சடை அண்ணலே.

சேவுயருந் திண்கொடியான் திருவடியே
சரணென்று சிறந்த அன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன்றான்
வழிபட்ட நலங்கொள் கோயில்
வாவிதோறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே.

இந்திரசந்தி (கிழக்கு)
பண் - காந்தாரம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ண வுரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறு மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவதுமில்லை.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடு பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

அக்கினி சந்தி *(தென்கிழக்கு)*
பண் - கொல்லி

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

தம்மையே புகழ்ந் திச்சைபேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோருங்கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்(கு)
யாதும்ஐயுற வில்லையே.

யமசந்தி (தெற்கு)
பண் - கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவி லின்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவி லண்ணலை யபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதுமேத மில்லையே.

அறத்தான் வருவதே இனபம்; மற் றெல்லாம்
புறத்த; புகழும் இல.

நிருதி சந்தி *(தென்மேற்கு)*

பண் - நட்டபாடை

குற்ற மறுத்தார் குணத்தினுள்ளார் கும்பிடு
வார்தமக் கன்புசெய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக்கண்ணா ருறைபதி
யாகுஞ் செறிகொள்மாடம்
சுற்றிய வாசலின் மாதர்விழாச் சொற்கவி
காடநி தானநல்கப்
பற்றிய கையினர் வாழுமாவூர்ப் பசுபதி
யீச்சரம் பாடுநாவே.

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

வருணசந்தி *(மேற்கு)*

பண் - சீகாமரம்

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயில் உளாயேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்(து) உளோம்போகீர் என்றானே.

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

வாயுசந்தி *(வடமேற்கு)*

பண் - தக்கேசி

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள் செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே.

நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
அங்க ணன்றனை யெண்கணம் இறைஞ்சுங்
கோளி லிப்பெருங் கோயிலுள் ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே.

திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்களென் றெண்ணி
ஒருவரை மதியா(து) உறாமைகள் செய்து
மூடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினா லுன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

குபேரசந்தி *(வடக்கு)*

பண் - தக்கராகம்

வைத்தனன் தனக்கே தலையுமென் நாவும்
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை
யுரைத்தக்கால் உவமனே யொக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சில ராகில்
இவரலா தில்லையோ பிரானார்.

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவன் கண்டு
குறிப்பினொடு சென்றவடன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரங் கொடுத்தவனை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பாண்பாட
அணிமயில்கள் நடமாடு மணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே.

இண்டைமலர் கொண்டுமணல் இலிங்கம தியற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி யண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கனதூர் வினவில்

What from virtue floweth, yieldeth dear delight;
All else extern, is void of glory's light. 39

மண்டபமுங் கோபுரமும் மாளிகைசூ ளிகையும்
மறையொலியும் விழவொலியும் மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கண் மனம்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே.

ஈசானசந்தி (வடகிழக்கு)

பூந்துருத்தி நம்பி காடநம்பி திருவிசைப்பா

பண் -சாளரபாணி

முத்து வயிரமணி மாணிக்க மாலைகண்மேல்
தொத்து மிளிர்வனபோல் தூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில்தில்லை
அத்தனுக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே 1.

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயி ரவரொடும்
குடிவாழ்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே 2.

அல்லியம் பூம்பழனத்(து) ஆமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே! தென்தில்லைக்
கொல்லை விடையேறி! கூத்தா(டு) அரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே. 3.

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்(டு) எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே. 4.

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி! மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே. 5.

அகலோக மெல்லாம் அடியவர்கள் தற்சூழப்
புகலோடு முண்டென்று புகுமிட(ம்) நீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள்ய நண்ணியசீர்ச்
சிவலோகம் ஆவதுவுந் தில்லைச்சிற் றம்பலமே. 6.

களகமணி மாடம் சூளிகைசூழ் மாளிகைமேல்
அளகமதி நுதலார் ஆயிழையார் போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிகள் ஓங்கிருளை ஆங்ககற்றும்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே சேர்ந்தனையே.7.

பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச்
சூடகக்கை நல்லார் தொழுதேத்தத் தொல்லுலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாடோறும்
ஆடகத்தால் மேய்ந்தமைந்த அம்பலம்நின் ஆடரங்கே. 8.

உருவத்(து) எரியுருவாய் ஊழிதோ றெத்தனையும்
பரவிக் கிடந்தயனும் மாலும் பணிந்தேத்த
இரவிக்கு நேராகி ஏய்ந்திலங்கும் மாளிகைசூழ்ந்(து)
அரவிக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே. 9.

சேடர் உறைதில்லைச் சிற்றம் பலத்தான்தன்
ஆடல் அதிசயத்தை ஆங்கறிந்து பூந்துருத்திக்
காடன் தமிழ்மாலை பத்தும் கருத்தறிந்து
பாடும் இவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே.

சாளரபாணிப் பண்ணிற்கு ஒப்ப சாதாரிப் பண்பாடப்படுவதும் உண்டு

பண் - சாதாரி

தலையே நீ வணங்பகாய்
தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழு மீசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறுசெயும் வைகாவிலே.

*திருச்சிற்றம்பலம்*

செயற்பாலது ஓரும் அறனே; ஒருவற்கு
உயற்பால தோரும் பழி. 40

# திருமுறைப் பாடல்கள் ஓதப்படும் இராகங்கள்

| | | |
|---|---|---|
| நட்டபாடை | - | கெம்பீர நாட்டை |
| தக்கராகம் | - | காம்போதி |
| பழந்தக்கராகம் | - | சுத்தசாவேரி |
| தக்கேசி | - | காம்போதி |
| குறிஞ்சி | - | ஹரிகாம்போதி |
| வியாழக்குறிஞ்சி | - | சௌராஷ்டிரம் |
| மேகராகக் குறிஞ்சி | - | நீலாம்பரி |
| யாழ்மூரி | - | அடானா |
| இந்தளம் | - | மாயாமாளவகௌளை |
| சீகாமரம் | - | நாதநாமக்கிரியை |
| காந்தாரம் | - | நவரோஸ் |
| பியந்தைக்காந்தாரம் | - | நவரோஸ் |
| கொல்லி | - | நவரோஸ் |
| கொல்லிக்கௌவாணம் | - | நவரோஸ் |
| நட்டராகம் | - | பந்துவராளி |
| காந்தாரபஞ்சமம் | - | கேதாரகௌளை |
| பஞ்சமம் | - | ஆகிரி |
| பழம்பஞ்சுரம் | - | சங்கராபரணம் |
| செவ்வழி | - | யதுகுலகாம்போதி |
| கௌசிகம் | - | பைரவி |
| சாதாரி | - | பந்துவராளி |
| புறநீர்மை | - | பூபாளம் |
| அந்தாளிக் குறிஞ்சி | - | சாமா |
| திருநேரிசை | - | நவரோஸ் |
| திருவிருத்தம் | - | எந்தராகத்திலும் பாடலாம் |
| திருக்குறுந்தொகை | - | நாதநாமக்கிரியை |
| திருத்தாண்டகம் | - | ஹரிகாம்போதி |
| செந்துருத்தி | - | மத்தியமாவதி |
| திருவாசகம் | - | மோகனம் |
| திருவிசைப்பா | - | பந்துவராளி/சௌராஷ்டிரம்/சக்கரவாகம் |
| திருப்பல்லாண்டு | - | ஆனந்தபைரவி |
| திருமந்திரம் | - | சாமவேதகானம் |

# சைவநெறிப் பாடமும் பயிற்சியும்

சாந்தையூரான்

கிரியைகள்

உருவ வழிபாடு

இறை வழிபாட்டை எளிதாக்குவது உருவவழிபாடு. இவ்வழிபாடு செயல்கள் மூலம் நடைபெறுவது கிரியைகள் ஆகும்.

கிரியைகள்

கிரியைகள் பற்றிச் சிவாகமங்கள் விளக்குகின்றன. கோயிலில் நடைபெறும் கிரியை பூசை ஆகும்

பூசை

உருவத்திருமேனியைத் தீப மூலம் உபசாரம் செய்வது பூசையாகும்

வழிபாடு ஆற்றும்முறை

- ☆ கண்ணும் மனமும் பதிய வழிபடல்
- ☆ வாயால் தோத்திரம் பாடல்
- ☆ அங்கங்களால் பக்தி வழிச் செல்லல்
- ☆ கைகளால் தொழுதல்
- ☆ செவிகளால் ஆண்டவன் புகழ்கேட்டல்

பரார்த்தக் கிரியைகள்

பரார்த்த கிரியை, வழிபடுவோர் நன்மை கருதிச் செய்யப்படுகிறது

காமியக்கிரியைகள்

விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நிகழ்த்தப்படுவது காமியக் கிரியைகள் ஆகும். இது பயனை எதிர்பார்த்துச் செய்வதாகும். குறிக்கோள் எண்ணம் நிறை வேறச் செய்வதாகும்.

கிரியைகள் ஆவன நித்திய பூசைகள், திருவிழாக்கள், உருத்திர அபிஷேகம், ஸ்நபனாபிஷேகம், சங்கா பிஷேகம்.

நிஷ்காமியக் கிரியைகள்

பிறர் நலன் கருதி இறை அர்ப்பணமாகச் செய்யப்படுவது நிஷ்காமியக்கிரியை எனப்படும். இக்கிரியை இறைவனுக்கு உரியது உயர்ந்த பக்குவ நிலையில் ஆற்றப்படும்.

காமிய, நிஷ்காமியக் கிரியைகளின் பொது அம்சங்கள் அபிஷேகம் அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், ஆசீர்வாதம்.

காமியக்கிரியை

பயனை எதிர்பார்த்துச் செய்யப்படுவதால் காலம் வீணாகிறது.

நிஷ்காமியக் கிரியை

இறைஅர்ப்பணமாகச் செய்யப்படுவதால் கிரியையின் பலன் கூடுதலாகும்

திருநாவுக்கரசர் (அப்பர்சுவாமி கூறுவது

காமியக் கிரியை செய்து காலத்தைக் கழிக்க வேண்டாம்
நிஷ்காமியம் செய்து உள்ளத்தை உணர்க
சாமி சொருபத்தை அறிந்து அவனை அடையுங் கருத்தோடு வழிபட்டுப் பலனையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

---

## பயிற்சி

1. இறைவழிபாட்டை எளிதாக்குவதற்கு உதவும் வழிபாடு யாது?
2. இருவகைக் கிரியைகள் எவை?
3. காமியக் கிரியையின் நோக்கம் எது?
4. நிஷ்காமியக் கிரியைகள் எதை நோக்கி செய்யப்படுகின்றன?
5. கிரியைகளின் பொது அம்சங்கள் எவை?
6. இறைவனின் திருமேனியை எவ்வாறு வழிபடலாம்?
7. குறிக்கோள் எண்ணம் நிறைவேறச் செய்ய வேண்டிய பூசைகள் எவை?
8. கிரியைகளில் சிறந்தது எது?

## விடை

1. உருவ வழிபாடு.
2. காமியக்கிரியை, நிஷ்காமியக் கிரியை
3. விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நிகழத்தப்படுவது காமியக் கிரியை ஆகும்.
4. பிறர்நலன் கருதி இறை அர்ப்பணமாகச் செய்யப்படுகிறது.
5. அபிடேகம், அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம்.
6. கண்ணும் மனமும் பதிய வழிபடல்
   வாயால் தோத்திரம் பாடல்
   அங்கங்காளால் பக்தி வழிச் செல்லல்
   கைகளால் தொழுதல்
   செவிகளால் ஆண்டவன் புகழ் கேட்டல்
7. காமியக் கிரியை
8. நிஷ்காமியக் கிரியை

# THE SHAIVA LIFE

**S. Shivapadasundaram**, B.A.

A **SHAIVITE** is a worshipper of Shiva, the supreme God. The Shaivite must therefore lead a life consonant with the greatness of the god he worships. He has a dignity to maintain. Appar Swami gives a complete picture of Saiva life in a Single Stanza*. He says "we are not bound in fealty to any one; we are not afraid of death: we are free from the torments of hell, and hypocrisy is foreign to us; we are self-respecting; we know no suffering; we bow to nobody; we are ever happy; we know he who wears a white ear-ring, who is not subject to any one and who is the giver of all good". Since we are the eternal Servants of Shankara, (the giver of bliss) who is not a servant of any one, we cannot be servants of any one else. Since death comes as a release from this body, when it has become unfit for habitation, we would rather welcome death than fear it. We readily obey Him and are therefore free from every kind of suffering, including hell, which is the consequence of wrong doing. As servants of God, we also occupy the highest place in the world. Any other position is inferior to ours. There is therefore, no need for us to appear to be what we are not i. e. to be hypocrites. As the servants of Shiva we cannot condescend to do anything which is not in keeping with our high position. We hail with pleasures every kind of experience we undergo, in order to free us from Karma. So, even suffering is a source of pleasure to us. We cannot bow to others whether they are mighty men of the world or powerful gods of the upper world, as they are all inferior to the servants of Shiva. Divine meditation gives an uninterrupted joy leaving no room for unhappiness. Nothing is greater than being the slave of God. There is, therefore , no other position in this world, which we would care to seek. We would decline any if offered to us. Says Manickavasagar. "I Would decline even the positions occupied by Indra, Vishun and Bramah *."

We have no legitimate ground for anger, fear or, sorrow. God's Love for us is infinite. Everything that takes place in this world is the result of His Law of Love. Whatever happens to us, therefore, proceeds from His Love for us. It must hence be always good to us. There can then be no occasion for fear, sorrow or anger. We entertain these feelings in consequence of our ignorance of God's ways. In our folly, we fear the advent of what is all good and feel sorry when it comes to us.

Neither do we set any value on others' opinions of us. We must examine ourselves in the light if God's Laws. and if we are able to tell ourselves "you are good", we can certainly rest satisfied with ourselves. But nothing is more difficult to achieve than such an estimate of ourselves. Even Appar does not pass a favourable judgment on himself †. It is therefore, impossible for us to be able to say that today we are better than we were yesterday. If I am not able to say of myself, "you are not a righteous man", it is my duty to

குடியில்லாத தனி வீட்டில் தனியாக ஒரு பொழுதும் படுக்கக் கூடாது. வேத தர்ம சாஸ்திரம் அறிந்தவன் தூங்கும் சமயம் அவனைத் தட்டி எழுப்பக் கூடாது. மாதவிடாயான ஸ்திரியுடன் சம்பாஷணை செய்யக் கூடாது. வித்வசபை, யாகசாலை, ஓமம் செய்யும் இடம் ஆகிய இடங்களுக்கு சமன் இல்லாமல் ஆஜர் ஆகக் கூடாது.

reject others' praise of me. If they praise me they are mistaken. It also follows that our endeavour to get the praise of others is a folly of follies. Fame is false. It is a product of ignorance.

The true shaivite's life is an ideal one. He is fully armed against all tendencies to wrong doing, and is fully equipped to do the right. The sacred ashes which he wears is the Parashakti, the Love of God. With God's Love visibly present in him, he can only be kind and loving towards others. The worship at which he has surrendered himself to god, cannot permit him to do anything outside. "His Holy Laws," says Manikavachakar of God "make full use of me or sell me outright or sell me as Otty" *. He cannot therefore act contrary to His Laws. The Panchakshara tells him what his actual position is. On one side is Anava, which blinds him, and on the other side is the Surgeon who not only restores his Sight but also gives him a light (Shivagnanam) with which he can see things too subtle to be seen with ordinary light. He easily sees that he must avoid the blinder and join the eye-surgeon, the giver also of Supreme Light. His worship of God gives him a similar lesson and redoubles the might to do the right.

Coming to details the true Shaivite eats not to fatten his body but to get service from it to God. He does his work as Service to God. If he is a cultivator, he regards cultivation as Service to God, and on that account does this work with all his might. He does not allow his Slave as he is of God. He is proof against Anavic allurement if it catches his attention, he dismisses it, saying that it is of no concern to him. Whenever a new project comes to his mind, he measures it with the yard-stick, "How far will this project help me in my onward march to the ultimate goal ?" If he finds it not helpful to it, he rejects it. Pomp and power, rank and riches, fame and fashion can have no appeal to him.

The true Shaivite may belong to any class or caste. The Saints of the Periapuranam include men of all trades and castes. Most of them pursued the trades of the families in which they were born. But of these trades, Service to God was the Soul. They could make every item of their work an occasion for worship. There have been men who combined worship with work. One of these was seen one day plucking, one by one, the leaves of a thorny herb for cooking. The plucking of each leaf, he said, was accompanied by the repetition of the Panchaksharam. On several other occasions also, his lips were found to be busy, while he was engaged in some piece of work. He seemed to have made it a point to repeat Panchaksharam at all times. This was also inferable from the fact, that one day, while his wife was pounding rice, he advised her to repeat the name "Shiva" at each stroke of the pestle. His rule of life seems to be that work and worship must go together. The potter saint of the Periapuranam was worshipping God all the time he was making pots. But his worship did not end there. He made free gifts of pots to saints who needed them.

Coming now to nominal Shaivites like us, even we can improve our position if we make a serious effort. Our worship is capable of assuming one if three forms. It may be almost mechanical. In that case, the great gifts of our religion such as sacred ashes and Panchaksharam cannot do us any appreciable good With most of us this is the case. But it is some satiafsction to remember that the good, thought not appreciable, is never negligible. In the second form of worship, the intellect stands the worshipper the significance and potentiality of these Sadanas and can assist him in his attempt to mend and improve his ways. It can tackle desires of moderate strength but is over-powered by strong ones. In the third form the emotions also are present. They are a power and can keep down even strong rebellious desires. Worship accompanied by both the intellect and by the emotions can reform us and take us nearer true Shaivaism.

அக்கினி, சூரியன், சந்திரன், அரசமரம், வில்வமரம், பசு, ஜலம் இவைகளைப் பார்த்துக் கொண்டு மலஜலம் கழிப்பது கூடாது. பாம்புப் பற்றின் அருகிலும், எறும்புக் கூட்டத்தின் மீதும் சிறு நீர் கழித்தல் கூடாது.

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடி | 01 | 16.07.2000 | ஞாயிறு | ஆடிப்பிறப்பு, தக்ஷணாயன புண்ணிய காலம் காலை 7. 45 முதல் பகல் 2.13 வரை பூரணை விரதம். |
| | 03 | 18.07.2000 | செவ்வாய் | ஆடிச்செவ்வாய் |
| | 05 | 20.07.2000 | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 10 | 25.07.2000 | செவ்வாய் | ஆடிச்செவ்வாய். |
| | 11 | 26.07.2000 | புதன் | கார்த்திகை விரதம், மூர்த்தியார் குருபூசை, புகழ்ச் சோழர் குருபூசை. |
| | 12 | 27.07.2000 | வியாழன் | ஏகாதசி விரதம். |
| | 13 | 28.07.2000 | வெள்ளி | பிரதோஷ விரதம். |
| | 14 | 29.07.2000 | சனி | கூற்றுவர் குருபூசை. |
| | 15 | 30.07.2000 | ஞாயிறு | ஆடி அமாவாசை விரதம். |
| | 17 | 01.08.2000 | செவ்வாய் | ஆடிச்செவ்வாய். |
| | 18 | 02.08.2000 | புதன் | ஆடிப்பூரம் |
| | 19 | 03.08.2000 | வியாழன் | நாக சதுர்த்தி விரதம் |
| | 20 | 04.08.2000 | வெள்ளி | கருட பஞ்சமி. |
| | 21 | 05.08.2000 | சனி | ஷஷ்டி விரதம், பெருமிழலைக் குறும்பர் குருபூசை. |
| | 22 | 06.08.2000 | ஞாயிறு | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, சேரமான் பெருமாள் குருபூசை |
| | 24 | 08.08.2000 | செவ்வாய் | ஆடிச்செவ்வாய் |
| | 26 | 10.08.2000 | வியாழன் | ஏகாதசி விரதம், கலியர் குருபூசை, கோட்புலியர் குருபூசை. |
| | 27 | 11.08.2000 | வெள்ளி | வரலக்ஷ்மி விரதம். |
| | 28 | 12.08.2000 | சனி | சனிப்பிரதோஷ விரதம். |
| | 30 | 14.08.2000 | திங்கள் | பூரணை விரதம், இருக்கு வேத உபாகருமம். |
| | 31 | 15.08.2000 | செவ்வாய் | யஜுர்வேத உபாகருமம், ஆடிச்செவ்வாய் |
| | 32 | 16.08.2000 | புதன் | விஷ்ணுபதி புண்ணிய காலம் மாலை 7.10 முதல் இரவு 1.34 வரை. |

## சைவநீதிக்கு உங்கள் பங்களிப்பு

- ★ சைவநீதிக்குக் கட்டுரைகள், கவிதைகள் மற்றும் பொருத்தமான ஆக்கங்கள் தரக் கூடியவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். மாணவர்களும் ஆக்கங்கள் தரலாம்.
- ★ சைவநீதி பற்றிய உங்கள் அபிப்பிராயங்களையும் எதிர்பார்க்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைப் பிரசுரிப்பதனுடன் மேலும் சிறப்பான முறையில் வெளியிடுவதற்குரிய கருத்துக்களையும் நடைமுறைப் படுத்துவோம்.
- ★ உங்கள் ஆலய விழாக்களை முன்னிட்டுச் சைவநீதி சிறப்புமலர் வெளியிட விரும்புவோர் முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
- ★ சந்தாதாரருக்கு இதழ் கிடைக்காதுவிடின் / முகவரி மாற்றம் போன்றவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும்.


## சைவநீதி - சந்தா விபரம்

| தனிப்பிரதி | | | வருடச்சந்தா | | |
|---|---|---|---|---|---|
| இலங்கையில் | - | ரூபா 25.00 | இலங்கையில் | - | ரூபா 250.00 |
| இந்தியாவில் | - | ரூபா 25.00 (இந்திய ரூபா) | இந்தியாவில் | - | ரூபா 250.00 (இந்திய ரூபா) |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US $ 15. சைவநீதியின் வளர்ச்சிக்கு உங்கள் ஒவ்வொருவரதும் பங்களிப்புப் பெரிதும் வேண்டப்படும்.

சந்தா அனுப்பப்பட வேண்டிய முகவரி:

**C. NAVANEETHAKUMAR,**
42, Janaki Lane,
Colombo - 04,
Sri Lanka.



Regd. QD/22/News 2000. இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு 13
என்னும் முகவரியிலுள்ள யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 2000.07.07 இல் வெளியிடப்பட்டது.